For private circulation only


Book Post

www.tchsportal.co.in


# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்


விலை : ரூ 60

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் • நவம்பர் 2020 • இதழ் 6









## சீர்திருத்தம்

## அன்று அவசியம்
## இன்று அவசரம்



இடையன்குடி கால்டுவெல் நினைவு ஆலயம் (திருநெல்வேலி)

கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் பத்திரிக்கையின் வாசகர்கள், எழுத்தாளர்கள் மற்றும் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்பு, மாபெரும் மனமாற்ற இயக்கமாக செயல்பட்டுக்கொண்டிருந்த ஆதி திருச்சபை 4ம் நூற்றாண்டில் உலகமெங்கும் பரவியது. பரவிய வேகத்தில், பயிர்களுக்கிடையே களைகள் வளர்வது போல கிறிஸ்துவின் உபதேசங்களோடு கள்ளப் பாதனைகளும் வளரத்தொடங்கின. ஏறக்குறைய 1000 ஆண்டுகள் கிறிஸ்தவம் ஒரு தலைமையின் கீழ் அடங்கியிருந்தது. 16ம் நூற்றாண்டில் சீர்த்திருத்தம் ஆரம்பமாகி மார்ட்டின் லூத்தர் மூலம் பிராட்டஸ்டாண்ட் திருச்சபை தோன்றின. ஆனால் இன்று சீர்த்திருத்த திருச்சபைகளுக்குள் அநேக கள்ள உபதேங்கள் மலிந்துகிடக்கின்றன. நம் திருச்சபைகளில் சீர்த்திருத்தம் அவசியம் என்னும் அவசர காலத்தில் இருக்கிறோம். முதலாவது நம்வாழ்வில் ஏற்படும் சீர்த்திருத்தம் நம் சமூகத்தில் பரவி தேசத்தை நிரப்பட்டும்.

டிசம்பர் மாதம் நமக்கு கிறிஸ்துமஸ் காலம் என்பதால் கட்டுரை எழுத்தாளர்கள் இருளிலே நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள், மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசித்தது.

ஏசாயா 9:2 என்ற வசனத்தின் அடிப்படையில் 'இருளில் இருந்து ஒளியினிடத்திற்கு' என்ற தலைப்பின் கீழ் இருளில் வாழ்ந்துகொண்டிருந்த நம்மை கிறிஸ்துவின் ஒளியினிடம் வரவழைத்த மிஷனரிகள் நமக்கு அறிமுகப்படுத்திய கிறிஸ்மஸ் விழாக்கள், ஆராதனைகள் மற்றும் கொண்டாட்டங்கள் பற்றிய வரலாற்றுத் தொகுப்புகளை எழுதி 15ம் தேதிக்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றின் தனித்துவ பத்திரிக்கையான "கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்" என்னும் மாத ஆய்விதழை உங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு அறிமுகம் செய்ய அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும், திருச்சபையினர் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரிரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்;. (எபேசியர் 4:11-13).

தேவகிருபை நம் அனைவரோடும் இருப்பதாக

கிறிஸ்துவுக்குள்

மன்னா செல்வகுமார்


கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

பதிப்பாசிரியர் : மன்னா செல்வகுமார்

வடிவமைப்பு : சுஜித்.S



**கௌரவ ஆசிரியர்கள்**

டாக்டர். சாமுவேல் வசுந்தரன் சீனிவாசகம்
டாக்டர்.ஜஸ்டின்
Rt.Rev.Dr.L.ஜோசப் மோகன் குமார்
அருள்திரு.லாசரஸ் செல்வநாதன்
அருள்திரு. பிலிப் கே . மல்லி மோரினாள்
அருட்திரு.பேராசிரியர். மா. தேவராஜ்
பேராசிரியர்.மோ.மைக்கேல் பாரடே
அருள்திரு. இரா. சாமுவேல் ஜெயசீலன்
கிங்ஸ்லி மோசஸ் ஜேசுதாஸ்
G. ஆல்வின் ஜேக்கப்
ஜே.பர்னபாஸ்
அருள்திரு. ஜாண் சாமுவேல்
அருள்திரு. இர்வின் ஞானமுத்து
அருள்திரு. கிப்சன் ஜான்தாஸ்

**ஆசிரியர் குழு**

J.ஜான் ஞானராஜ்
அருள்திரு.முனைவர் ச.இராஜசேகரன்
மைக்கேல்
ஆர்.ஆர்.சீனிவாசன்
Dr.கனகராஜ்

**செய்தி ஆசிரியர்கள்**

டேனியல் மோகன்ராஜ்
ரமேஷ்

**சட்ட ஆலோசகர்**

வழக்கறிஞர். ஐ டி கிங் பால்



**அலுவலக முகவரி**

கிறிஸ்தவ வரலாற்று சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4),வடக்குத்தெரு,
பங்களா சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (திருநெல்வேலி)

மின்னஞ்சல்: christianhistorical@gmail.com
தொலைபேசி: +91 9176780001
+91 7538812218
04633 290401

# ஆபிரகாம் பண்டிதர்

புகைப்படக் கலைஞர்-ஆர்.ஆர்.சீனிவாசன்
சென்னை

# என்னும்

# புகைப்படக் கலைஞர்



தமிழிசையின் மரபு பற்றி ஆழமாக அறிந்துகொள்ள, நாம் பயில வேண்டிய முதல் அறிஞர் ஆபிரகாம் பண்டிதர். அவர் 1917 - இல் எழுதிய, கருணாமிர்தசாகரம் என்னும் இசைத்தமிழ் நூல் இந்திய இசை வரலாற்றில் ஒரு மைல் கல். தமிழிசையின் தொன்மை வரலாறு, சுருதிமுறைகள், நான்கு பெரும் பண்கள் ஆகியவற்றை விரிவாக விளக்கும் 'கருணாமிர்தசாகரம்' நூல் வெளிவந்து நூறு ஆண்டு நிறைவு பெற்று விட்டது.தமிழிசையின் பெருமையையும், தமிழர்களின் தொன்மையையும் உலகமே வியக்கும் வண்ணம், ஏழு இசைமாநாடுகள் நடத்தி, இசைத்தமிழை உயிர்ப்பித்தவர் ஆபிரகாம் பண்டிதர்.

கர்நாடக இசை என்பதே தமிழிசைதான், ராகங்களின் மூலமே பண் தான், ஓர் இயக்கியில் உள்ள ஆதார சுருதிகள் 22 அல்ல 24 தான் ,ச,ரி,க,ம,ப,த,நி என்ற ஏழு சுரப்பெயர்களும் தமிழுக்கேயுரியது, சமஸ்கிருதத்திற்கு அல்ல என்றும் வரலாற்றுத் தரவுகளோடு நிறுவியவர் ஆபிரகாம் பண்டிதர்

ஆபிரகாம் பண்டிதர் ஓர் ஆசிரியராக, சித்த மருத்துவராக, பரிசோதனை விவசாயியாக, சோதிடக்கலைஞராக, பதிப்பாளராக, அச்சகக் கலையின் முன்னோடியாக, பல கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியவராக. தமிழிசை மாநாடுகளை ஒருங்கிணைத்தவராக நாம் அறிவோம். ஆனால் இந்தியப் புகைப்படக்கலையின் முன்னோடியாகவும் அவர் இருந்துள்ளார் என்பது பெரும்பாலோனோர் அறியாதது.

ஆபிரகாம் பண்டிதர் 1859ல் தாமிரபணி நாகரிகத்தின் விழுதாக திருநெல்வேலி சாம்பவர் வடகரையில்பிறந்தார். பங்களாசுரண்டையில்பள்ளிப்படிப்பைமுடித்து1874ல்திண்டுக்கல் நார்மல் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்தார்.ஆபிரகாமின் அறிவாற்றலைக் கண்ட அப்பள்ளியின் தலைவர் அருட்திரு யார்க் அடிகளார் அவரை தமது மாதிரிப்பள்ளியில்



1911ல் ஆபிரகாம் பண்டிதர் தன்னுடைய கருணானந்தர் விவசாயப் பண்ணை திறப்பு விழாவை எடுத்தது, படத்திலிருக்கும் தண்ணீர் எடுக்கும் காற்றாலை அவரே உருவாக்கியது.

ஆசிரியராக நியமித்தார்.மாணவர்கள் அவரை "கதை உபாத்தியாயர்" என்று மாணவர்கள் அன்போடு அழைத்தனர்.

அருட்திரு யார்க் அடிகளார் அடிப்படையில் ஒரு புகைப்படக்கலைஞர், தினசரி புகைப்படங்கள் எடுத்து வந்தார். கலைகளிலும், இசையிலும், ஓவியத்திலும் அதீத ஆர்வம் கொண்டிருந்த ஆபிரகாம் பண்டிதர் புகைப்படக் கலையாலும் ஈர்க்கப்பட்டார். எந்தத் தயக்கமுமின்றி யார்க் அடிகளார் ஆபிரகாம் பண்டிதருக்கு புகைப்படக் கலையை கற்றுக் கொடுத்தார். நாளடைவில் ஆபிரகாம் பண்டிதர் புகைப்படக் கலையின் நுட்பங்களை அறிந்து அக்கலையில் விறபன்னர் ஆனார்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்தியாவிலேயே புகைப்பட ஸ்டுடியோவும், தொழிற்கலைப் பள்ளியும் முதலில் சென்னையில் தான் தொடங்கப்பட்டது. அதாவது இப்போதைய கவின் கலைக் கல்லூரியில். மதராஸ் ராஜதானியின் தலைநகராக இருந்த சென்னையில் மே மாதம் 1850ல் தொழிற்கலைப் பள்ளி அலெக்ஸாண்டர் ஹண்டர் என்னும் ஆங்கிலேயரால் தொடங்கப்பட்டது. அப்போது புகைப்படக்கலை முக்கியப் பாடமாகவும் இருந்தது. ஹண்டர் மற்றும் எலியட் ஆகியோரால் மாணவர்களுடன் சென்று தமிழகத்தின் முக்கிய ஊர்கள் அனைத்து புகைப்படங்களாக எடுக்கப்பட்டுள்ளன. "மெட்ராஸ்



புகைப்படச் சங்கம் (PSM, Photographic Society of Madras)"1857ல் முனைவர் அலெக்ஸாண்டர் ஹண்டரால் தொடங்கப்பட்டது. (முதல் பெயர் மெட்ராஸ் அமெச்சூர்போட்டோகிராபர்கள் சொசைட்டி MAPS என்று அழைக்கப்பட்டது). வால்டர் எலியட் இதன் முதன் தலைவராக இருந்து சென்னையில் புகைப்படச் சங்கத்தை வளர்த்தெடுத்தார். இது உலகின் மிகப் பழமையான புகைப்படச் சங்கமாகும்.

பின்பு ஆபிரகாம் பண்டிதர் தஞ்சாவூருக்கு வந்து 1902ல் ஆபிரகாம் பண்டிதர் விலை உயர்ந்த 15 மு 12 டல்மெயர் லென்சுடன் ஒரு புகைப்படக் கருவியை வாங்கி தொடர்ச்சியாகப் புகைப்படங்களை எடுக்கலானார். பல வேதிப்பொருட்களைக் கொண்டு அவரே நெகட்டிவ்களை கழுவி அவரே ப்ரிண்ட் செய்தார். பல புதிய கண்டுபிடிப்புகளையும் கழுவும் முறையில் செய்தார்.இந்தியாவின் சிறந்த அமெச்சூர் புகைப்படக்கலைஞராகவும் அவர் பிரபலமானார்.அதன் நீட்சியாக 1909ல் லண்டனிலுள்ள ராயல் கலைச் சங்கத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஷுல்ஸ், வேட்ஜ்வுட், நீப்ஸ், மற்றும் டாகெரே போன்ற புகைப்படக் கலைஞர்கள் செல்வாக்கு பெற்றிருந்த காலம் அது.அக்காலத்தில் புகைப்படக்கலை தனிமனிதச் செயல்பாடாக இருந்தது. படம் எடுப்பது, நெகட்டிவைக் கழுவது,பின்பு பிரிண்ட் செய்வது, இறுதியாக அதனை மவுண்ட் செய்து பிரேம் செய்வது என எல்லாவற்றையும் புகைப்படக் கலைஞரே செய்ய வேண்டும்,அது ஒரு பொற்காலம்.

புகைப்படக் கலையின் தொழில்நுட்ப அடிப்படையே பின்னாளில் 1912ல் தஞ்சையில் மின் விசையில் இயங்கும் முதல் அச்சகமாக லாலி அச்சகத்தை உருவாக்கினார் , அவ்வச்சகத்திலேதான் அவரே வடிவமைத்து , அச்சுக் கோர்த்து கருணாமிர்தசாகரம் என்னும் அழியாப் புகழ் பெற்ற இசை நூலை மிகுந்த அழகியலுடன் உருவாக்கினார்.

அவருடைய நான்கு மகன்களும் புகைப்படக் கலையில் நிபுணத்துவம் பெற்றனர். சுந்தரபாண்டியன் ஓவியத்திலும் , புகைப்படக்கலையிலும் சிறந்து விளங்கினார். அதற்கு ஒரு படி மேலாக ஜோதிப் பாண்டியன் புகைப்படக் கலையில் மிக உயர்ந்த இடத்திற்குச் சென்றார். லண்டன் ராயல் புகைப்படக் கலைச் சங்கத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.உலகம் முழுதும் பயணித்து தன்னுடைய புரோமைட் ப்ரிண்டுகளை காட்சிப் படுத்தினார் (இந்த ஜோதிப்பாண்டியனின் இசைச் சீடர்தான் தஞ்சை தன்ராஜ் மாஸ்டர், தன்ராஜ் மாஸ்டரின் சீடர்கள்தான் இளையராஜாவும், ஏ,ஆர். ரகுமானும்). வரகுணப் பாண்டியன் இந்தியப் புகைப்படக்கலையின் பெடரேசன் நடத்திய பல புகைப்படக் காட்சிகளுக்கு நடுவராக இருந்தார். அவருடைய கடைசி மகன் சௌந்தர பாண்டியன் தென்னிந்திய ரயில்வேயின் அதிகாரப் பூர்வமான புகைப்படக் கலைஞராக இருந்தார். தொடர்ச்சியாக அவரது குடும்பத்திலிருந்தவர்கள், புகைப்படத் துறையிலும், திரைப்பட ஒளிப்பதிவுத்துரையிலும் பிரகாசித்தனர். பின்பு ஆபிரகாம் பண்டிதரின் பேரன் தவப்பாண்டியன் தஞ்சாவூர் அமெச்சூர் புகைப்படக் கழகத்தைத் தொடங்கி நீண்ட காலம் நடத்தி வந்தார். எல்லாப் பேரன்களுமே இக்கழகத்தின் வளர்ச்சியில் பங்கு பெற்றனர்.

இசை, நடனம் மட்டுமன்றி புகைப்படக் கலையிலும் தஞ்சாவூர் சிறப்பாக விளங்கியதற்கு ஆபிரகாம் பண்டிதரின் குடும்பமே காரணம்.

# நான் உன் ஊரில் பணிபுரிந்த மிஷனெரி எழுதுகிறேன்



நேசரின் மார்பில் சாய்ந்து,
தங்கசாலையில் நடந்து,
வற்றாத ஜீவநதியின் ஓரத்தில் அமர்ந்து,
தூதர்களின் பாட்டு சத்தத்தை கேட்டு,
பன்னிரெண்டு விதமான ஜீவவிருட்சங்களின் மத்தியில்,
சாபமில்லாத தேசத்தில்,
ஆட்டுக்குட்டியானவரின் சிங்காசனத்தின் முன்பு
அவரின் நாமத்தை தரித்துக்கொண்டு,
இருளும், சூரியனும் இல்லாத தேசத்தில்,
ஆட்டுக்குட்டியானவரின் நித்திய ஆட்சியில் பங்குபெற்று,
சுகமாய் வாழ்கின்ற எனக்கு என்ன குறை உண்டு?
என் சிந்தனையும், என் முழு எண்ணமும் உன்னைக் குறித்து
நீ வாழும் வாழ்க்கையைக் குறித்து,
நீ செல்லும் வழியை நினைத்து,
என் தாய் தந்தையைக் குறித்து நான் சிந்தித்ததில்லை,
சிந்தித்திருந்தால் நான் மிஷனெரியாக வந்திருக்க வாய்ப்பில்லை,

என் சுகத்தைக் குறித்து சிந்திக்கவில்லை
சிந்தித்திருந்தால் நான் உங்களை சுகமாய் வாழ செய்திருக்க வாய்ப்பில்லை,
என் எதிகாலத்தைக் குறித்து சிந்திக்கவில்லை
சிந்தித்திருந்தால் உங்கள் எதிர்காலம் சிறப்பாக அமைய செய்திருக்க வாய்ப்பில்லை,

உன்னை காயப்படுத்த நான் இதை எழுதவில்லை
உன்னை குற்ப்படுத்த நான் எண்ணவில்லை
உன்னை வெட்கப்படுத்த துளிகூட விரும்பினதில்லை
உன்னை குறை சொல்ல நான் இதை சொல்லவில்லை

தூதர்களின் இன்ப பாடல் சத்தத்திற்குள் என்னை தூங்கவிடாமல்,
என் மனதை சந்தோஷத்திற்கு இடங்கொடாமல்
உங்கள் நினைவு என்னை உட்காரவிடாமல்
என் சிந்தனையை சிதறவிடாமல்
என் அன்பை விடாமல், கருத்தாய் எழுதுகிறேன் இந்த மடலை,

நான் இந்த உலகை விட்டு, உங்கள் திருச்சபையை விட்டு,
கடந்து சென்று பல வருடங்கள் கடந்தோடி போயிட்டு,
ஆனாலும் உங்கள் நினைவு அகலவில்லை என்னை விட்டு,

உனக்கு தெரியுமா?
என் சபை பாகுபாட்டைவிட்டு உன்னைத் தேடிவந்தேனென்று?
என் சொந்த அடையாளத்தை இழந்தேனென்று?
நான் வந்தேன் ஆண்டவரின் அன்பைப் பற்றிகொண்டு,
என் சொந்தாடையாளத்தை இழந்து நின்று,
உங்களுக்கு காட்டினேன் சமுதாயத்தில் நல்லதொரு அடையாளமொன்று.

நீயோ அடையாளத்தையும், ஆசீர்வாதத்தையும் அனுபவித்து கொண்டு
கேட்கிறாய் திருச்சபை எனக்கு என்ன செய்ததென்று?
பேசுகிறாய் திருச்சபை வீணென்று,
தூற்றுகிறாய் திருச்சபை ஆவியில் செத்ததென்று
நடக்கிறாய் மற்ற சபைகளுக்கு ஆவியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று,
எழுதுகிறாய் திருச்சபைக்கு விரோதமாக நின்று,
எழுதுகிறாய் பல மொட்டைக்கடிதங்கள் இன்று,

இதற்காகவா நான் காட்டினேன் மீட்பின் வழியை,
நீ வாழவேண்டும் என்பதற்காகவே நான் இழந்தேன் என் வழியை.
ஆலயத்தில் அநேக நிகழ்ச்சி! மிக்க மகிழ்ச்சி!
நான் இருந்தபோது கூட கண்டதில்லை இப்படிப்பட்ட நிகழ்ச்சி
நிகழ்ச்சிக்கு காட்டும் ஆர்வத்தை நீ ஆராதனையில் காட்டவில்லையே ஏன்? திருவிருந்து ஆராதனையை நீ திரும்பிகூட பார்க்கவில்லையே ஏன்?
ஞாயிறு ஆராதனை உனக்கு ஞாபகம் இல்லையே ஏன்?
தினம் நடக்கும் காலை ஆராதனையைக் குறித்த கவலை இல்லையே ஏன்?
மதி எழும் நேரத்தில் நடக்கும் மாலை ஆராதனையில் பங்குபெற மனம் இல்லையே ஏன்?
முழு இரவு ஜெபத்திற்கு முகம் காட்ட விரும்பவில்லையே ஏன்?
உபவசத்திற்கும் உனக்கும் சம்பந்தம் எல்லை என்கிறாயே ஏன்?

மகிமை நிறைந்த ஆராதனைகளை அசட்டை செய்வதற்காகவா
அரும்பாடுபட்டு கட்டினேன் உன் ஆலயத்தை?
திருமணத்திற்கும், கல்லறைக்கும் மட்டுமே தேவை இவ்வாலயம் என்றால்
நான் பாடுபட்டு கட்டியிருக்க மாட்டேன் உன் ஆலயத்தை நேசிக்க பழகிக்கொள் உன் ஆலயத்தை
அது உனக்கு தரும் ஜீவஊற்றாகிய இயேசுவை,

நீங்கள் ஆசரிக்கும் அசனப்பண்டிகை வெகுசிறப்பு,
அண்டை அயலகத்தாரும் கூடினர், மறந்தது எல்லா வெறுப்பு,
ஒன்று கூடினது அனைத்து உடன்பிறப்பு
பண்டிகை மட்டும்தான் வாழ்க்கை அல்ல,
பண்டிகை வாழ்வின் ஒரு அங்கம் தான்

பண்டிகை ஆசரிக்கும் உன்னை நான் கேட்கிறேன்
இன்று வேதத்தை வாசித்தாயா?
இன்று தேவனோடு பேசினாயா?
எத்தனை ஏழைகளுக்கு உதவி செய்திருக்கிறாய்?
எத்தனை ஆத்துமாக்களை ஆதாயம் செய்திருக்கிறாய்?
எத்தனை மிஷனெரிகளை அனுப்பியிருக்கிறாய்?
உன் சொந்த தேசத்திற்காக ஜெபித்தாயா?
எத்தனை ஆலயங்களை கட்டியிருக்கிறாய்?
எத்தனை மிஷனெரிகளை அனுப்பியிருக்கிறாய்?
பண்டிகைகளை சிறப்பாக ஆசரிக்கிற நீ வீண் அரசியலை விட்டு எழுவாயா?
அனுதினமும் சிலுவையின் அன்பை நினைத்து பார்ப்பாயா?
கிறிஸ்துவின் அன்பை உன்னுடைய தலைமுறைகள் பேசும்படி செய்வாயா?
கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்றுவாயா?

புதிய ஆத்துமாக்களை மந்தையில் சேர்ப்பாயா?
உன் பிள்ளைகளை கிறிஸ்துவின் வழியில் வளர்த்திடுவாயா?
உன்னை அந்தவான் கரையில் சந்திக்கும் நாளில்
இயேசு உன்னை மெச்சிக் கொள்ளும் வேளையில்
என் உள்ளம் மகிழ மற்றொரு தருணம் தாவென உன்னை வேண்டி நிற்கின்றேன்.

இப்படிக்கு
உன்னை வாழவைத்த
மிஷனெரி

அருள்திரு. ஜான் சாமுவேல்
தூத்துக்குடி

ரோடா அலெக்ஸ்,
சென்னை

# 1917 vs 2020




*எம் ஜே சர்குணம் வெளியிட்ட திருநெல்வேலியின் பிஷப் செல்வின் வாழ்க்கை வரலாறு (1966) புத்தகத்தின் தொடக்க வரிகள் கீழே*

"1917 ஆம் ஆண்டில் திருநெல்வேலி டவுன் மற்றும் தாமிரபரணி ஆற்றின் இருபுறமும் உள்ள அண்டை கிராமங்களிலும், நகரத்தின் மையப்பகுதி வழியாக ஓடும் கால்வாயிலும் காலராவின் மிக மோசமான தொற்றுநோய் வெடித்தது. சடலங்கள் ஓடையில் மிதந்தன வடிகால்களில் கிடந்தன - தெருவெங்கும் மரண ஓலம். நகராட்சி மன்றம் தயாராக இல்லை, அரசாங்க சுகாதாரத் துறையினராலும், ஒரு சில தனியார் மருத்துவர்களாலும் நோயின் ஆவேச தாக்குதல்களைச் சமாளிக்க முடியவில்லை. மருந்தகங்களில் உள்ள ஊழியர்கள் ஆபத்துக்கு ஆளாகினர், மருந்துகளால் பயனில்லை, போதுமானதாகவும் இல்லை."

இதே போன்ற நிலைமைதான் நாம் இந்த 2020 ஆம் ஆண்டு கொரோனா தொற்றுநோயினால் சந்தித்துகொண்டிருக்கிறோம். ஆனால் அன்று அதை எவ்வாறு மக்கள் சந்தித்தனர்? பெருந்தொற்று காலத்தில் அவர்கள் மனதில்



நின்றது என்ன? அந்த புத்தகத்தின் அடுத்த பத்தியில் இந்த கேள்விக்கு பதிலும் அதினால் புத்தகத்தின் தொனியும் அமைகிறது :-

திருநெல்வேலியில் அந்த நேரத்தில் செல்வின் என்ற ஒரு இளம் மிஷனரி (30 வயது) மற்றும் இறையியல் ஆசிரியர் இருந்தார் - மற்றவர்களில் சிலர் செய்ததைப் போல தொற்றுநோயிலிருந்து தப்பிக்க விவேகத்துடன் விடுமுறை எடுக்காமல் அவர் செயலில் குதித்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. "அவர் கைவிடப்பட்ட அல்லது புறக்கணிக்கப்பட்ட நோயாளிகளிடையே சென்று நூற்றுக்கணக்கான காலரா நோயால் பாதிக்கப்பட்டவர்களின் உயிரைக் காப்பாற்றுகிறார். அந்த நாட்களில் தடுப்பூசி கேட்கப்படாதது, அவர் பொட்டாசியம் பெர்மாங்கனேட் மற்றும் பிரார்த்தனை சக்தியுடன் மட்டுமே செயல்பட்டார். அவர் வீடுகளுக்குள் நுழைந்தார், நோயாளிகளை பராமரித்தார், குளிர்ந்த கைகால்களைத் தேய்த்தார், வயிற்றுப்போக்கினால் அழுக்கடைந்த ஆடைகளை சுத்தம் செய்தார், அரிசி கஞ்சி செய்து நகர்ந்தார் என்று கூறப்படுகிறது. அவரது செயல்களின் விளைவைக் கண்டவுடன் விரைவில் ஒரு குழுவினர் அவருடன் சேர்ந்து கொண்டனர், செல்வின் **"அதிசய சுகமளிக்கும் வல்லமை உடையவர்"** என்று புகழப்பட்டார்.

திருநெல்வேலி நகரத்தின் தலைவரும் கவுன்சிலர்களும் காலரா தொற்று முடிந்தபின் செல்வினை கவுரப்படுத்த திருநெல்வேலி பிரதான சாலை வழியாக ஊர்வலமாக (அலங்கரிக்கப்பட்ட கோயில் யானையுடன்) சென்றனர். **'உடல் மற்றும் ஆன்மாவின் மருத்துவர்'** என்று அவருக்கு திருநெல்வேலி மக்களால் மதத்தின் தடைகளைத் தாண்டி அன்புடன் அழைக்கப்பட்டார். காலரா தொற்றுநோய் தொடர்பாக அவரது உன்னதமான பணிகளைப் பாராட்டும் விதமாக கவுன்சிலர்கள் அவரை தங்கள் தலைவராகக் கோரினர்.

மற்றொரு எழுத்தாளர் 1917வுக்கு முன் மதுரை மற்றும் திருநெல்வேலியில் சிலர் சேர்ந்து 'செல்வின் சங்கார சங்கம்'உருவாக்கினார்கள் என்று குறிப்பிடுகிறார் - ஏனெனில் செல்வினின் நட்பும் தயவும் பல இளைஞர்களை அவரது பிரசங்கத்தைக் கேட்க ஈர்த்தது. 1917வுக்கு பின் அவரை எல்லோரும் கொண்டாடுகின்றனர். இவைகளெல்லாம் நடந்து சுமார் 25 ஆண்டுகள் பிறகு அதே ஜார்ஜ் தியோடர் செல்வின் திருநெல்வேலியின் பிஷப் ஆனார். அப்போது கூட பிரதிஷ்டை நாளன்று திருநெல்வேலியின் தலைசிறந்த இந்து பக்தர்களும் அவரை வாழ்த்தி அவர் காலரா சமயத்தில் செய்த பணியினை நினைவு கூர்ந்தனர் என்றும் தகவல் உண்டு. இன்றளவும் திருநெல்வேலி மாநகராட்சி அலுவலகத்தில் பிஷப் செல்வின் அவர்களின் புகைப்படம் உள்ளது என்றும் செய்தி.

நெருக்கடியின் போது மக்களுடன் நிற்கும் கிறிஸ்தவ தலைவர்களின் பணிகள் மீண்டும் மீண்டும் சொல்லப்படுகின்றன - ஆர்தர் மார்கோசிஸ், சி டி இ ரேனியஸ், ராபர்ட் கால்டுவெல் மற்றும் அநேகர். காலரா அதிகம் தாக்கிய 20ஆவது நூற்றாண்டில் ஊர் ஊராக கிறிஸ்துவ ஆயர்களும் அவர்களுடன் ஊளியர்களும் சேவை செய்ததை இன்றும் நினைவுகூறும் மூத்தவர்கள் உண்டு.

இந்த தன்னிச்சையான இரக்கம் எங்கே போய்விட்டது? கிறிஸ்துவின் நாமத்தை சுமந்து வாழும் நாம் அவரின் பண்புகளை இழந்துவிட்டோமா? வழிகாட்டிகளாக திகழ்ந்த செல்வின் போன்றோரின் மானிடம் கவர்ந்த மனித நேயம் நமக்கு இல்லையா? நம்மை சுற்றி நடக்கும் காரியங்களை நன்கு கவனித்து ஆராய்ந்து நமக்கு பாதிப்பு இல்லாத வகையில் பரிதாபமும் பிராத்தனையும் மட்டும் செய்யும் செயலற்றவர்களாகிவிட்டோமா???

தென்னிந்திய திருச்சபை (சி.எஸ்.ஐ) திருவிருந்து ஆராதனை
தமிழ்இசை பாடல் வழிபாட்டுமுறை பாடலாசிரியர் மற்றும் தென் தமிழக புகழ்வாய்ந்த குருவானவர்

# அருள்திரு. எம்.எஸ்.ஜேசுதாசன் ஐயரவர்கள்

வாழ்க்கை வரலாறு

## குருத்துவக் கல்வியும் முழுநேர ஊழியமும்

நாசரேத் திருமறையூரில் நடைபெற்றுவந்த வேதாகம கல்லூரியில் நான்கு ஆண்டு வேதாகம கல்வி படிப்புக்கு விண்ணப்பித்து 1945 இல் வேதாகம கல்லூரியில் சேர்ந்தார்கள் 1949இல் வேதாகமக் கல்வியை நிறைவு செய்தார்கள். 12.06.1949 இல் நாசரேத் தூய யோவான் தேவாலயத்தில் நடைபெற்ற அருட்பொழிவு ஆராதனையில் உதவி குருவாக அருட்பொழிவு பெற்றார்கள். உதவிக் குருவான பின் திருநெல்வேலி திருமண்டல நற்செய்தி பரப்பு குழு (Band) வில் சுவிசேஷ ஊழியம் செய்தார்கள். 05. 03.1950 அன்று நாசரேத் தூய. யோவான் தேவாலயத்தில் நடைபெற்ற குருத்துவ அருட்பொழிவு ஆராதனையில் குருவானவராக அருட்பொழிவு பெற்றார்கள்.

## பேராயர் ஆணையாளராக (Bishop Commissionary) அருள்திரு.எம்.எஸ். ஜேசுதாசன் ஐயரவர்கள்

நெல்லை பேராயர் மகாகனம் A.G. ஜெபராஜ் அவர்கள் பணி நிறைவு பெற்றவுடன் பேராயர் ஆணையாளராக (Bishop Commissionary) அருள்திரு.எம்.எஸ். ஜேசுதாசன் ஐயரவர்களை நியமித்து சென்றார்கள். இப்பதவியில் 08.09.1970 முதல் 12.05.1971 அன்று பேராயராக மகாகனம் T.S. கேரட் அவர்கள் பதவி ஏற்கும் வரை சுமார் ஒன்பது மாதங்கள் சிறப்புற ஆண்டவருக்கு மகிமையாக பணி செய்தார்கள்.

## பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெறுதல்

'கிறிஸ்துவுக்குள் வாலிபர்' (Youth For Christ) ஊழியத்தின் தலைவராக, குருவானவராக பணி செய்தபோது ஒருநாள் சாப்பிடுவதற்கு முன்பு ஜெபித்துக் கொண்டே இருந்த போது பரிசுத்தஆவியின் அபிஷேகத்தை பெற்றுக்கொண்டார்கள் அந்நிய பாஷையில் பேச ஆரம்பித்தார்கள். அதன்பின் எங்கெல்லாம் ஊழியத்திற்கு சென்றார்களோ அங்கெல்லாம் அந்நியபாஷை பேசியதோடு அதன் அர்த்தத்தையும் சொல்லுவார்கள் இது அவரிடம் காணப்பட்ட சிறப்புக்குரிய காரியமாகும் முரட்டாட்டம் கொண்ட மாணவர்களை நல்லவர்களாக மனம் திரும்பச் செய்யும் பணியிலும் எம்.எஸ்.ஜேசுதாசன் ஐயரவர்கள் சிறப்பாக பணி செய்தார்கள். சபை மக்களுக்குள் போட்டி பிரச்சினைகள் வரும்பொழுது அவற்றை ஜெபத்தோடும் தேவன் தந்த சாதுரியமான ஞானத்தோடும் சிறப்பாக மேற்கொண்டார்கள்.

## கர்நாடக இசை வல்லுநர்

கர்நாடக இசையில் அதிக ஆர்வம் கொண்ட ஜேசுதாசன் ஐயரவர்கள் ஆசிரியர் பயிற்சி பெறும் பொழுது முறைப்படி கர்நாடக இசையை கற்று தேர்ந்தார்கள் நல்ல குரல்வளம், பாட்டு இயற்றி இசை அமைக்கும் திறன் ஐய்யரவர்களிடம் காணப்பட்டது வேனிற்கால விடுமுறை வேதாகம பள்ளி சகோதரிகளுக்கு கருத்து பாடல்களை இயற்றி ராகம் அமைத்துக் கொடுப்பார்கள். 'ஒளி வந்தது எழும்பிப் பிரகாசி'(இப்பாடல் கிறிஸ்தவ கீர்த்தனைகள் நூலில் இடம்பெற்றுள்ளது) 'கட்டடம் கட்டிடும் சிற்பிகள் நாம்' ஆகிய புகழ்பெற்ற பாடல்கள் எம்.எஸ்.ஜேசுதாசன் ஐயரவர்களால் இயற்றி இசையமைக்கப்பட்டவை. கடையனோடையில் சேகர குருவானவராக பணியாற்றிய போது இசை ஆர்வம் மிக்க பாக்கியநாதன் ஆசிரியர் அவர்கள் பாடல் இயற்றுவதற்கும் பாடலுக்கு மெட்டு அமைப்பதற்கும் ஊக்கம் அளிப்பவராக காணப்பட்டார் அவர் கொடுத்த ஊக்கத்தின் காரணமாக கடையனோடை பாக்கியநாதன் அவர்கள் அநேக பாடல்களை இயற்றி இசை அமைத்தார்கள். கர்நாடக இசை மீது அதிக ஆர்வம் கொண்ட ஐயரவர்கள் தமது ஐந்து பெண் மக்களுக்கும் கர்நாடக இசை ராகங்களின் பெயர்களையே சூட்டி மகிழ்ந்தார்கள்.

## சி.எஸ்.ஐ திருவிருந்து ஆராதனை முறைமைக்கு தமிழிசை பாடல் வழி முறைமை

நெல்லை பேராயர் மகாகனம் A.G.ஜெபராஜ் அவர்கள் காலத்தில்

### ஐயர் இசையமைத்த பாடல்கள்

- பரிசுத்த தேவனே நித்தியமானவா
- பிரதான குருநாதா பிரசன்னம் அருள்வீரே
- தோத்தரிக்கிறோம்
- கர்த்தாவே எங்கள் தேவனே
- கர்த்தாவே கிருபையாயிரும்



தென்னிந்திய திருச்சபை திருவிருந்து வழிபாட்டு முறை நடைமுறைக்கு வந்தது. அதை பாடல் வழி முறைமையாக மாற்றினால் நன்றாக இருக்கும் என விரும்பிய பேராயர் அவர்கள் 'சி.எஸ்.ஐ தமிழ்இசை பாடல்வழி திருவிருந்து ஆராதனை முறைமை' அமைக்கும் பணியை ஜேசுதாசன் ஐயரவர்களிடம் ஒப்படைத்தார்கள் அந்தப் பணியை மிகச் சிறப்பாக எம்.எஸ்.ஜேசுதாசன் ஐயரவர்கள் செய்து முடித்தார்கள்.

### பணி நிறைவுக்குப் பின்பான ஊழியங்கள்

1982-1983 இல் பாளையங்கோட்டை தூய திரித்துவ பேராலய (கதீட்ரல்) குருவானவராக பணி செய்த நிலையில் ஜேசுதாசன் அவர்களுக்கு 65 வயது நிறைவடைந்ததால் 1983 இல் பணிநிறைவு பெற்றார்கள். பணி நிறைவு பெற்ற பின் பாளையங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தின் பின்புறம் உள்ள லங்கர் கானா தெருவில் வாடகை வீடு ஒன்றில் குடியேறினார்கள். சில ஆண்டுகளுக்குப்பின் அங்கிருந்து சாந்தி நகர் கீழ்ப்பகுதியில் இருந்த வாடகை வீடு ஒன்றில் குடியேறினார்கள் சொந்த வீடு வாங்கும் படி குடும்பத்தினரும் நண்பர்களும் வற்புறுத்திய போதும் வாங்கவில்லை.

### சிறப்பு திறமைகளும் குணநலன்களும்

கிணறுகளையும், ஆழ்துளை கிணறுகளையும், தோண்டும் இடத்தில் அடிப்பகுதியில் நீரோட்டம் உள்ளதா என பார்த்த பின்பே தோண்டுவார்கள் நீரூற்று பார்க்கிற சிறப்பு திறமை ஜேசுதாசன் அவர்களுக்கு இருந்தபடியால் குருத்துவ பணிசெய்த இடங்களிலும் பணிநிறைவுக்குப் பின்பு காருண்யா பல்கலைக்கழகம் போன்ற பல இடங்களுக்கும் சென்று எவ்வித ஊதியமும் பெறாமல் மிகச் சிறப்பாக நீரோட்டம் உள்ள இடத்தை கண்டுபிடித்து கொடுப்பார்கள்.அந்த ஞானத்தை ஆண்டவர் அவர்களுக்கு தந்திருந்தார். தமது ஐந்து பெண் பிள்ளைகளுக்கும் 5 மருமகன்களுக்கும் ஆலோசகராக ஐயரவர்கள் இருந்தபோதும் அவர்களது தனிப்பட்ட காரியங்களிலும் குடும்ப காரியங்களிலும் ஐயரவர்கள் தலையிட்டதில்லை ஐயரவர்களின் மருமகன் அருள் மாணிக்கம் அவர்கள் தாம் 16 ஆண்டுகள் மருமகனாக அவர்களோடு வாழ்ந்த போதும் தனது செயல்பாடுகளில் தனது மாமனார் தலையிட்டது கிடையாது என்றும் தமது விருப்பத்தை திணித்தது கிடையாது என்றும் ஆலோசனைகளை கேட்டால் மட்டுமே கூறுவார்கள் என்றும் ஐயரவர்களை குறித்து நற்சான்று பகிர்கிறார்கள். பிறரைத் குறித்து யாரும் குறை கூறி பேசினால் மறுமொழியாக ஜேசுதாசன் ஐயரவர்கள் எதுவும் கூறுவது கிடையாது, பிறரைக் குறித்து குறைவாக கூறுவது, குறைவாக கருத்து வெளியிடுவது என்பது அவர்களுடைய வாழ்வில் இல்லை, நகைச்சுவையாக இருக்கிற பட்சத்தில் சிரித்துக் கொள்வார்கள். வேதாகமத்தை குறித்தோ, வேத சத்தியங்களை குறித்தோ, சபை வளர்ச்சி குறித்தோ பேசினால் மணிக்கணக்கில் பேசிக் கொண்டே இருப்பார்கள் உரையாடல் தொடர்ந்து கொண்டே இருக்கும் இந்த உரையாடலின் வெளிப்பாடே அவர்களுடைய மருமகன் திரு.அருள் மாணிக்கம் அவர்கள் ஞானஸ்நானம் குறித்த விரிவாக்கம் என்ற நூலை எழுதும்படி தூண்டியது. ஜேசுதாசன் ஐயரவர்கள் உயிரோடு இருக்கும்போது அந்த நூலை திருத்தம் செய்து தரும்படி மாமனார் எம்.எஸ்.ஜேசுதாசன் ஐயரவர்களிடம் மருமகன் அருள் மாணிக்கம் கேட்டபோது அந்த நூலை முழுவதுமாக வாசித்து திருத்தங்களுடன் கூடுதல் குறிப்புகளையும் கொடுத்தார்கள். அந்த நூல் எம்.எஸ்.ஜேசுதாசன் ஐயரவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் அன்று சென்னையில் வைத்து வெளியிடப்பட்டது. ஊழிய காலத்திலும் பணிநிறைவுக்குப் பின்பும் பணத்தை தமது கையால் தொடுவது இல்லை என்ற தமது பொருத்தனையை மிகச்சரியாக கடைப் பிடித்தார்கள். ஏழை-எளிய சபை பிள்ளைகளை KNH போன்ற இலவச உணவு உடை உறைவிடம் தரும் விடுதிகளில் தங்கி கல்வி பயில்வதற்கு ஏற்பாடு செய்து கொடுப்பார்கள்.

### பணி நிறைவு நாட்களில் இலக்கியப்பணி

பணி நிறைவு பெற்ற 1983 ஆம் ஆண்டே சிறுவர் வாழ்வு என்ற சிறுவர்களுக்கான மாத இதழை தொடங்கினார்கள் அதன் ஆசிரியராக ஆர்.எஸ்.ஜேக்கப் அவர்களின் மகன் தியாரூவை நியமித்தார்கள் அதன்பின் நறுமணம் என்ற மாத இதழ் ஐயரவர்களால் 1984 இல் தொடங்கப்பட்டது. நறுமணம் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவந்தது அதன் ஆசிரியராக பேராசிரியர் ஜார்ஜ் முல்லர் அவர்களை நியமித்தார்கள்

### இறுதி நாட்களும் மரணமும்

அருள்திரு எம்.எஸ் ஜேசுதாசன் ஐயரவர்கள் தொடக்க காலம் முதல் இறுதி காலம் வரை தனக்கென நிலம், வீடு, பணம் எதையும் சேர்த்து வைத்துக் கொண்டதில்லை தமது பிள்ளைகளிடமும் பணம் சேருங்கள், வீடு கட்டுங்கள் என அறிவுரை கூறியதும் இல்லை. மரணமடைவதற்கு முந்தின நாள் மற்றொரு ஐயரவர்களுடன் மலையடிவாரம் வரை நடந்து சென்று ஜெபித்து வந்தார்கள். 22.01.1992 அன்று அதிகாலை 5 மணி அளவில் உடல் சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் சேர்ந்த போது ஐயரவர்களிடம் மருத்துவர் வயதை கேட்க 74 என ஐயரவர்கள் தெளிவாக பதில் சொல்ல மருத்துவர் ஒரு ஊசியை போட்டு விட்டு நாக்குக்கு அடியில் ஒரு மாத்திரையையும் வைத்து விட்டு சென்றார், அதோடு ஐயாவுக்கு நல்ல ஓய்வு வேண்டும் நன்றாக தூங்கட்டும் என கூறிவிட்டு சென்று விட்டார். அடுத்த சில நிமிடங்களில் இயேசுவே இயேசுவே என்ற சத்தம் ஐயரவர்களிடம் இருந்து வந்தது சில நிமிடங்கள் கழித்து தொண்டையில் ஏதோ அடைப்பது போன்ற சத்தம் வந்தது மருத்துவர் அழைத்துவரப்பட்டார் ஐயரவர்களை பரிசோதித்த மருத்துவர் ஐயா மரித்து விட்டார்கள்எனகூறினார். ஐயரவர்களின் நல்லடக்கம் சமாதானபுரம் கல்லறை தோட்டத்தில் 23 .01.1992 அன்று நடைபெற்றது ஐயரவர்களின் துக்க நிவிர்த்தி ஜெபக்கூட்டம் 24. 01. 1992 அன்று நடைபெற்றது.

### நீதிமான்

அருள்திரு.எம்.எஸ்.ஜேசுதாசன் ஐயரவர்களது வாழ்க்கை வரலாற்றை எழுதும்போதே இப்படிப்பட்ட பரிசுத்தவான்கள்எவ்வளவுநேர்மையாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்த்தேன். எண்ணுகையில் மனம் மெய்சிலிர்த்தது. ஆண்டவரே இப்படிப்பட்ட பரிசுத்தவானை எங்களது திருநெல்வேலி திருமண்டலத்திற்கு தந்தீரே என்று சொல்லி ஆண்டவரை மகிமைப்படுத்துகிறேன்.


J. ஜான் ஞானராஜ்
கல்லிடைகுறிச்சி

## பேராயர் இராபர்ட் கால்டுவெல் அவர்களால் கட்டப்பட்ட

அருள்திரு பி . ஜான்சன் சாமுவேல் ஜேசுதாஸ்
மேலவாசல், மதுரை

# கொடைக்கானல் தூய பேதுரு ஆலயம்

அமெரிக்கன் - மதுரை மிஷன் பணிகள் 1834 ஆம் ஆண்டில் தொடங்கியது. மிகுந்த குளிர்ந்த தட்பவெட்பநிலை உடைய அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து வந்த அமெரிக்கன் - மதுரை மிஷனின் மிஷனெரிகள் தமிழகத்தின் வெப்பநிலையை தாங்க இயலாது, கோடைகாலத்திலாவது குளிர்ச்சியான இடத்தில் வாழவேண்டும் முடிவுசெய்து அதற்குத் தகுந்த இடம் பழனிமலைத்தொடரில் அமைந்துள்ள கொடைக்கானல் என்பதனைக் கண்டறிந்தனர். 1845 ஆம் ஆண்டில் அமெரிக்கன் மதுரை மிஷனைச் சேர்ந்த அறிவர் திரேஸி ( Dr. Tracy- யும் மற்றவர்களும் சேர்ந்து ஒரு வீட்டைக்கட்ட ஆரம்பித்து 1847 ஆம் ஆண்டில் ரூபாய் 2,000/- செலவில் நிறைவு செய்தனர். அதற்கு East House என்று பெயர் வைத்தனர். என ஆங்கில மொழி பேசுகின்ற அமெரிக்கர்கள், ஆங்கிலேயர்கள், பிற அயல்நாட்டினர் மற்றும் மிஷன் பணிகளோடு தொடர்புடைய உள்ளூர் மக்கள் ஆண்டவரை ஆராதிக்க ஒரு ஆலயம் தேவை என்று உணரப்பட்டது. மதுரை மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்த திரு . பார்க்கர் ( Parkar ) மற்றும் அமெரிக்கன் - மதுரை மிஷன் மிஷனெரி அருள்திரு . J.T. நாய்ஸ் (Noyes) உள்ளிட்ட 12 பேர் 1853 ஆம் ஆண்டு ஜீலை 16 ம் நாள் கொடைக்கானலில் கூடி இது குறித்து ஆலோசனை நடத்தினர். மதுரை சார்பு நீதிபதி ( Sub - Judge ) அவர்களின் துணைவியார் திருமதி . பிலிப்ஸ் ( Philips ) அம்மையாரின் நன்கொடையைப் பெற்று பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. 1866 ஆம் ஆண்டு





இவ்வாலயக் கட்டுமானப்பணி நிறைவுபெற்றது. இவ்வாலயத்தில் அமெரிக்கர்களும், ஆங்கிலேயர்களும் தத்தமது ஆராதனை முறைகளின்படி தனித்தனியே ஆராதனை நடத்திக்கொண்டார்கள். (இந்த ஆலயம்) இருந்த இடத்தில் இன்றைக்கு ஒரு நினைவுத்தூண் மாத்திரமே உள்ளது) பேராயர் கால்டுவெல் அவர்கள் கோடை காலத்தில் கொடைக்கானலில் வந்து தங்குவதை வழக்கமாக வைத்திருந்தார். 1877 ஆம் ஆண்டில் பேராயராக திருநிலைப்படுத்தப்பட்ட பின்பு ஆங்கிலேயருக்காக ஒரு ஆலயம் கட்டவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. 1883 ஆம் ஆண்டில் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கொடைக்கானலில் ஆலயம் கட்டுவதற்காக Mount Nebo என்று அழைக்கப்பட்ட சிறிய குன்றையும், ஆலயம்கட்டுவதற்கான நிதியொன்றையும், பேராயர் கால்டுவெல் அவர்களுக்கு வழங்கினார். இவ்விடத்தில் ஆலயக் கட்டுமானப்பணிகள் தொடங்கப்பட்டு 1888 ஆம் ஆண்டு நிறைவுபெற்றது. இந்த புதிய ஆலயம் St.Peter's Kodaikanal என்றபெயரால் 1888 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம்நாள் (கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்குபின் வந்த நான்காம் ஞாயிறு) அன்று பேராயர் கால்டுவெல் அவர்களால் மங்கலப்படைப்பு செய்யப்பட்டது. ஆரம்பத்தில் இந்த ஆலயம் பேராயர் கால்டுவெல் அவர்களின் தனிப்பட்ட சொத்தாகவும் வழிபாட்டிடமாகவும் மட்டுமே இருந்தது. இதனைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் திருச்சபையின் பல முக்கியமான நிகழ்வுகள் இவ்வாலயத்தில் நடைபெற்றன. 1889 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 16 ஆம் நாள் (திரித்துவ ஞாயிறு) இவ்வாலயத்தில் குருத்துவ அருட்பொழிவு வழிபாடு நடைபெற்றது. திரு . ஆர்தர் ஹீபர் தாமஸ் (இராமநாதபுரத்தில் பணியாற்றிய S.P.G. மிஷினெரி) திரு J. M. சத்தியநாதன் ஆகிய இருவரும் உதவி குருக்களாகவும் Deacons) அருள்திரு. J. சதானந்தம், அருள்திரு. G. எலியேசர் மற்றும் அருள்திரு. S.S. டேனியல் ஆகிய மூவரும் குருக்களாகவும் ( Priests ) பேராயர் கால்டுவெல் அவர்களால் அருட்பொழிவு செய்யப்பட்டார்கள். இந்த வழிபாட்டில் இராமநாதபுரம் பகுதியின் S.P.G. மிஷன் பொறுப்பாளராக 17 ஆண்டுகள் பணிசெய்து இங்கிலாந்திற்கு திரும்ப ஆயத்தமான அருள்திரு ஜார்ஜ் பில்லிங் (George Billing) அவர்கள் அருட்பொழிவு செய்தியளித்தார்கள். பேராயர் கால்டுவெல் அவர்களின் மறைவிற்குப் பின் திரு . லாயிட் ( Lloyd ) என்பவர் Lay Trustee என்ற பொறுப்பில் இருந்து அதன் திருப்பணிகளை நடத்திவந்தார். திருச்சிராப்பள்ளியில் இருந்து ராணுவ குருக்கள் ( Military Chaplains ) மாதமொருமுறை திருவிருந்து ஆராதனை நடத்த வந்து சென்றார்கள். 1916 ஆம் ஆண்டில் அருள்திரு . சாமுவேல் ஜெகநாதன் என்பவர் குருவாக நியமிக்கப்பட்டார். 1941 ஆம் ஆண்டுவரை அரசின் நிதியுதவி இவ்வாலயத்திற்கு கிடைத்துவந்தது. ஓய்வுபெற்ற S.P.G. , C.M.S . , மிஷனரிகள் கௌரவ குருக்களாக பின்வந்த காலங்களில் பணியாற்றினர். 1987 முதல் இந்திய குருக்கள் பணிசெய்யத் தொடங்கினர். இதனை எழுதுகின்ற நானும் 2005 ஜீன் முதல் 2006 மார்ச் வரை இவ்வாலயத்தின் குருவாக பணியாற்றினேன்.

# திரும்பி பார்க்கின்றேன்

மோதிலால் ஜோயல்,
முதலூர்



சற்று சிந்தித்துப் பாருங்கள். கூடையில் வைக்கப்பட்டு, எறும்புகளால் அரிக்கப்பட்ட சிதைந்துப்போன குழந்தையின் உடல்களைக் கண்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? மத நம்பிக்கையின் விளைவாகத் தாங்கள் பெற்ற குழந்தைகளையே கடலுக்குள் எறியும் தாய்மாரைக் கண்டால் என்ன செய்வீர்கள்? பல ஆண்டுகளுக்குமுன் இந்தியாவில் மேற்சொன்னக் காட்சிகளைக் கண்ட ஒரு பிரிட்டிஷ் மிஷனரி என்ன செய்தாரென்று இன்று அறிந்துகொள்ளலாம்.

226 ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் இது. வில்லியம் கேரி மால்டா (மேற்கு வங்காளம்) என்ற இடத்திற்கு அருகில் சென்றுகொண்டிருக்கும்போது ஒரு மரத்தில் கூடை ஒன்று தொங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார். கூடைக்குள் என்ன இருக்கிறதென்று தெரிந்துகொள்ள ஆர்வத்தோடு அருகில் சென்று பார்த்தவருக்கு பேரதிர்ச்சி! அப்படி என்னதான் பார்த்தார் அவர்? எறும்புகளுக்கு இரையாகிப்போன ஒரு சிறு குழந்தையின் உடலைத்தான் பார்த்தார். யார் அந்தக் குழந்தையை இப்படி சாகக்கொடுத்தது? ஏன் இப்படிச் செய்தார்கள்?

வில்லியம் கேரியின் நாட்களில், குழந்தைகளைச் சாகக்கொடுப்பது இந்தியாவில் பரவலான மத வழக்கமாய் இருந்தது. ஒரு குழந்தை வியாதிப்பட்டால், அக்குழந்தை அசுத்த ஆவியின் பிடியில் இருப்பதாக எண்ணப்பட்டது. அக்குழந்தையை ஒரு கூடையில் போட்டு மூன்று நாட்களுக்குத் தொங்கவிட்டுவிடுவார்களாம். அந்த மூன்று நாட்கள் குழந்தை உயிரோடிருந்தால் மட்டுமே அதைக் காப்பாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுமாம். எறும்புகளால் அரிக்கப்பட்டக் குழந்தையைக் கண்ட அந்த நாள் கேரியின் வாழ்வில் பெரிய திருப்புமுனையைக் கொடுத்தது, இனிமேல் மனுக்குலத்திற்காக மரித்த இயேசுவைப்பற்றி அறிவிப்பது மட்டும் போதாது, அப்பாவி உயிர்களைக் காப்பாற்றப் போராடவேண்டியதும் தனது கடமையென உணர்ந்தார் கேரி அவர்களுக்காகப் போராட முடிவெடுத்தார்!

ஒவ்வொரு வருடமும் குளிர் காலத்தில், ஹுக்லி நதி கடலில் கலக்கும் இடத்தில்வைத்து 'சாகர் மேலா' என்ற பண்டிகை நடப்பது வழக்கம். அப்பண்டிகையில், தங்கள் வேண்டுதலை நிறைவேற்றத் தாய்மார் தாங்கள் பெற்ற பிள்ளைகளையே கடலுக்குள் போட்டுவிடுவார்களாம். பாவம் அப்பிள்ளைகள் கடலில் மூழ்கியோ, முதலையால் கடிபட்டோ மரித்துப்போவார்கள். மேலும், 'புனிதமான' இக்காரியத்தைச் செய்வதால் (கங்கை மாதாவிற்குத் தங்கள் கர்ப்பத்தின் கனியை காணிக்கையாக்குவதால்) தங்களுக்கு பாவவிமோசனம் கிடைக்குமென்றும் அவர்கள் எண்ணினார்கள். இந்த மூடப்பழக்கங்களை ஒழிக்கக் கேரி ஆர்வம் காட்டுவதையறிந்த பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல், கேரியை அழைத்து சிசுக்கொலைக்கான (infanticide) காரணங்கள், எத்தனை பேர் கொல்லப்படுகிறார்கள் போன்ற விபரங்களைச் சேகரித்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்கச் சொன்னார். மறுப்பு தெரிவிக்காமல் உடனே அப்பணியை ஏற்று, விபரங்களைச் சேகரித்து அறிக்கையை சமர்ப்பித்தார் கேரி. அவர் கொடுத்த அறிக்கையின் விளைவாக சிசுக்கொலை சட்டவிரோதமானது என்று அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது.

1804ஆம் ஆண்டு வில்லியம் கேரி ஒரு சாகர் பூஜா நிகழ்ச்சியை காணச்சென்றிருந்தபோது, நிர்வாக விழிப்புணர்வு காரணமாக ஒரு குழந்தைக்கூட கங்கை மாதாவிற்குக் காணிக்கையாக்கப்படவில்லை. அதைக்கண்டு கேரி நிம்மதி பெருமூச்சு விட்டார்!

இதைக் கேட்கிற பிரியமானவர்களே, பிரிட்டிஷ் மிஷனரி ஒருவர் இந்தியாவிற்கு வந்து மூடப்பழக்கத்தை ஒழிக்கப் பாடுபட்டிருக்கிறார். நம் சமுதாயத்தில் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார். இந்தியத் திருச்சபையாகிய நாம், நம் நாட்டின் மூடப்பழக்கங்களை ஒழிக்கவும், மனித உரிமை மறுப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும் என்ன செய்து கொண்டிருக்கிறோம்?

## மார்க்கத் துண்டுத்தாள் பிரசுர சங்கம்

திருநெல்வேலியில் நடைபெற்ற சி.எம்.எஸ். சங்க ஊழியத்திற்கும் , நாகர்கோவிலில் நடைபெற்ற லண்டன் மிசனரி சங்க ஊழியத்திற்கும் துண்டுத்தாள் பிரசுரங்களைச் சென்னையிலிருந்து சன்மார்க்கப் பிரசுரக் கழகத்தினிடமிருந்தே வாங்கி வந்தனர். திருநெல்வேலியிலும் , நாகர்கோவிலும் அதை அச்சிட வேண்டுமென லண்டன் மிசனரி சங்க மிஷனெரிகளுக்கு ரேனியஸ் கடிதம் எழுதினார் . அவர்களும் அதை ஒப்புக்கொண்டனர் . திருநெல்வேலி மற்றும் நாகர்கோவிலில் மார்க்கத் துண்டுத்தாள் பிரசுரச் சங்கத்தை சீர்திருத்தத் திருநாளான அக்டோபர் மாதம் 31ஆம் தேதி ஆரம்பித்தனர். லண்டன் மிசனரி சங்கம் கப்பல்கள் வரும்பொழுதெல்லாம் அக்கப்பல்களில் அச்சிடுவதற்கான தாள்களையும் அனுப்பி வைத்தனர். கன்னியாகுமரி முதல் மதுரை முடிய அப்பிரதிகள் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது.

முனைவர் மோசசு மைக்கேல் பாரடே
சென்னை

# கிறிஸ்தவக் கீர்த்தனைகளும் ஐரோப்பிய அருட்தொண்டர்களும்

✝ **ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்குகிறான் இறைவன் எனக் கூறுவது தமிழ் மரபு.**

இசையின் நோக்கமே - அச்சொல்லே உணர்த்தும் பொருளின்படி, மனத்தை இசைவிப்பது - அதாவது இணையச் செய்வது - ஒன்றிடச் செய்வதுதான். இணையச் செய்வது அல்லது ஒன்றிடச் செய்வது என்றால் எவருடன் அல்லது எதனுடன் என்ற கேள்வி எழுகிறது. அக்கேள்விக்கு விடை, எங்கும் எல்லாமுமாகப் பரவி நிற்கும் இறைவனுடன் அல்லது இறைப்பிரசன்னத்துடன் என்பதுதான். ஆகவே, இறைவனோடு நம் இதயத்தை இயைபுபடுத்தும் இசை, நம் மனத்துக்கேற்றதாகவும் மண்ணுக்குரியதாகவும் இருத்தலே சாலச் சிறப்பு. எனவே, கிறித்தவ வழிபாடுகளிலும் அந்தந்த மண்ணுக்குரிய இசையிலும் மரபிலும் வழிபாட்டுப் பாடல்கள் அமைதலே, வழிபாட்டைப் பொருளுள்ளதாகவும் உணர்ச்சிப்பூர்வமாகவும் அமைத்திடும்.


அருள்திரு.எச்.ஏ. பாப்லி ஐயர்

இந்த உண்மையை, இன்றைய கிறித்தவர்கள் பெரும்பாலும் உணராது, மேற்கத்திய இசை மரபுகளைத் தம் வழிபாடுகளில் பெரிதும் பின்பற்றுவது, வழிபடுவோர் இறைவனோடு ஒன்றுவதற்குத் தடையாக அமைவது மட்டுமன்று, வழிபாட்டில் பங்கேற்காத பார்வையாளர்களுக்கும், ஓர் அந்நியத்தன்மையை ஏற்படுத்தி விடுகிறது.

இவ்வாறாக, தமிழகக் கிறித்தவ வழிபாடுகளில் மேற்கத்திய இசையின் தாக்கம் பெரிதும் இடம் பெற்றிருப்பதற்குக் காரணம், ஐரோப்பாவிலிருந்து வந்த அருட்தொண்டர்கள் அல்லது மிஷனெரிகள் வழியாக நாம் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பெற்றுக் கொண்டவர்கள் என்பதாலும் அவர்கள் நம்மை மேற்கத்திய இசை மரபுகளிலேயே பழக்கிவிட்டனர் என்பதாலும்தான் என்ற ஒரு கருத்து பொதுவாகப் பலரிடம் நிலவி வருகிறது. இது அடிப்படையில் ஒரு தவறான கருத்து என்பதைச் சுட்டிக்காட்டுவதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

அருட்தொண்டர்களின் ஆரம்ப முயற்சிகள்

தொடக்க முதலே, ஐரோப்பிய அருட்தொண்டர்கள், தமிழ் மக்களுக்கு நற்செய்தியை அறிவித்து, அவர்கள் மெய்யான கடவுளாம் இயேசுபிரானை வழிபட வழிநடத்தியதிலிருந்தே, மக்கள் தம் தாய்மொழியாம் தமிழில் இறைவனை ஆராதிக்க வேண்டும் - அவர்கள் புரிந்து கொள்ளும் மொழியிலே கடவுளைப் பாடிப் பரவ வேண்டும் என விரும்பி, அதற்காகப் பல முயற்சிகளை எடுத்தனர். தமிழில் தெய்வீகப் பாடல்களை எழுதிப் பயிற்றுவித்தனர். அவர்களில் முக்கியமான சிலரது பெயர்களை இங்குக் கருதலாம்.

**அருளாளர் இராபர்ட் - டிநொபிலி**: 'தத்துவ போதகர்' என்றழைக்கப்பட்ட இந்த இயேசு சபைத்துறவி 1606 இல் மதுரை வந்தவர், பல நூல்களையும், பல கிறிஸ்தவ இசைப் பாடல்களையும் தமிழில் எழுதினார். இவர் எழுதிய பாடல்கள், கீர்த்தனைகள் என்று குறிப்பிடப்படுவதற்கான சான்றுகள் இல்லை எனினும் இவை ஆரம்ப முயற்சிகளாய் அமைந்தன.

**அருளாளர் வீரமாமுனிவர்**: இன்னொரு இயேசு சபைத் துறவியான இவர்தான், தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் இசையையும் முறையாகக் கற்று, பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அமைப்போடு கூடிய கிறிஸ்தவக் கீர்த்தனையை முதலாவது எழுதினார். 1710 இல் இறைப்பணிக்காக மதுரை வந்த இவர் வெளியிட்ட 'ஞான கீதங்கள்' எனும் நூலில் இடம் பெற்ற 'ஜகநாதாகுருபரநாதா, திரு அருள்நாதா, ஏசு பிரசாதநாதா' என்னும் கீர்த்தனைப் பாடல், சீர்திருத்தச் திருச்சபையினருடைய வழிபாட்டுப் பாடல் நூல்களிலும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**முதல் சீர்திருத்தத் திருச்சபை அருட்தொண்டர் பர்தலோமியு சீகன்பால்கு**: இவர்தாம் தரங்கம்பாடியில், 1707 ஆம் ஆண்டு எழுப்பிய, புது எருசலேம் தேவாலயத்தில் புதிய விசுவாசிகள் வழிபாட்டில் பாடுவதற்காகப் பல செருமானிய மற்றும் ஆங்கிலப் பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்ததோடு, தமிழகத்துச் சைவ, வைணவக் கோயில்களில் பாடப்படும் தேவாரப் பாடல்களைப் போன்றும் எழுத முயன்றார் என்பதாகவும், ஆனால் அக்காலத்தில் அப்படிப்பட்ட பாடல்கள் கிறிஸ்தவ வழிபாடுகளில் இடம் பெறுவதற்கு வெளியிலிருந்தும் உள்ளிருந்தும் பல எதிர்ப்புகளும் ஆதரவற்ற சூழலும் இருந்ததால், அம்முயற்சிகளை அவர் தொடர இயலாத நிலை ஏற்பட்டதாகவும், சீகன் பால்குவின் திருப்பணிகளை ஆய்ந்து எழுதியுள்ள அறிவர் டேனியல் ஜெயராஜ், இசையறிஞர் சி. விக்டர் போன்றோர் குறிப்பிடுகின்றனர். ஆனால், அவர் தொகுத்த ஞானப்பாட்டுகள் நூலை, அவரது



அருளாளர் எட்வர்ட் வெப்

உடன் அருட்தொண்டர்களும் தொடர்ந்து தொகுத்து 1713, 1727, 1723, 1733, 1756 ஆண்டுகளில் பல பதிப்புகளாக வெளிவரச் செய்தனர்.

அவரைத் தொடர்ந்து வந்த அருட்தொண்டர்களுள் ஏராளமான ஞானப்பாட்டு-களைத் தாமே மொழி பெயர்த்தும் தொகுத்தும் வெளியிட்டவர் யோகன் பிலிப்பு பெப்ரீசியஸ் ஐயர் ஆவார். ஆனால், அவை தமிழிசையில் அமைந்த கீர்த்தனைப் பாடல்கள் அல்ல.

**அருளாளர் எட்வர்ட் வெப்**: இவ்வகையில், கிறிஸ்தவக் கீர்த்தனைகளுக்குப் பெரும் பங்காற்றியவர் அமெரிக்கன் மிஷனைச் சேர்ந்த அருட்திரு.இ.வெப் அவர்கள் ஆவார். தமிழ்க் கிறிஸ்தவப் புலவர்களில் முன்னவராகவும் முதல்வராகவும் திகழ்ந்து, ஏராளமான கிறிஸ்தவக் கீர்த்தனைகளை இயற்றி, கிறித்தவ வழிபாட்டில் கீர்த்தனைகளின் பயன்பாட்டுக்கு முதற்சுழியிட்ட தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரைத் தாமே நேரில் சில இறையியல் மாணாக்கர்களுடன் சென்று சந்தித்து, இசைப்பயிற்சி பெற்றதோடு, முதன் முதலாக 1853 இல் 'ஞான கீதங்கள்' என்னும் தொகுப்பு நூலை, சாஸ்திரியாரின் பாடல்களோடு வெளியிட்ட சாதனையாளர் அருளாளர் வெப் ஐயரே ஆவார்.

**அருள்திரு.G.T.வாஷ்பர்ன்** என்ற அருட்தொண்டர் இந்நூலை மேலும் பல புதிய கீர்த்தனைகளைச் சேர்த்து, திருத்தங்கள் பல செய்து புதுப்பித்து 1870 ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பாக வெளியிட்டார்.

**அருளாளர்.ஜே.எஸ். சாண்ட்லர்**: இந்த இரண்டாம் பதிப்பாக வந்த கீர்த்தனை நூலை. இன்னும் விரிவாக்கி, மேலும் 109 புதிய கீர்த்தனைகளைச் சேர்த்து மூன்றாம் பதிப்பாக, 1901 ஆம் ஆண்டு வெளியிட்டார். சாண்ட்லர் ஐயர் தொகுத்த கீர்த்தனை நூலில் திருநெல்வேலி, தரங்கம்பாடி முதலிய இடங்களில் பாடப்பட்ட கீர்த்தனைகளும் சேர்க்கப்பட்டன.

**அருள்திரு.எச்.ஏ. பாப்லி ஐயர்**: முன் கூறப்பட்ட அருள்தொண்டர்களின் வரிசையில், சென்னைக் கிறிஸ்தவ சன்மார்க்க நூல் சங்கத்தின் சார்பில் அமைக்கப்பட்ட குழுவின் தலைவராக அமைந்து, 1926 ஆம் ஆண்டு மேற்குறித்த கீர்த்தனை நூலின் நான்காம் பதிப்பை வெளியிட்டார். பாப்லி ஐயர் தமிழிசையில் பெரும் புலமை பெற்றிருந்தவராகவும், தென்னிந்திய இசை வரலாறு பற்றிய ஆய்வு நூலை எழுதியவராகவும் திகழ்ந்தார்.

இந்த ஐரோப்பிய அருட்தொண்டர்களைத் தொடர்ந்து சென்னை கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின் வாயிலாக, கிறிஸ்தவக் கீர்த்தனைத் தொகுப்பு நூல்கள் பல பதிப்புகளைக் கண்டு வருவது நாம் அறிந்ததே. இங்கு முக்கியமாகச் சுட்டிக் காட்டப்பட்டது இப்பணியில் ஐரோப்பிய அருட்தொண்டர்களின் ஈடுபாடே ஆகும். இவை பற்றிய பலஅரிய தகவல்களை 'கிறிஸ்தவக் கீர்த்தனைகள் கவிஞர்கள்' என்னும் அரிய நூலில் முனைவர் யோ. ஞானசந்திர ஜாண்சன் நன்கு தொகுத்தளித்துள்ளார்.

அருட்தொண்டர்கள் இயற்றிய கீர்த்தனைகள்: இவ்வாறாக கீர்த்தனை நூல்களைத் தொகுத்து வெளியிட்டது மட்டுமன்றி, தமிழிசையில் நற்புலமை பெற்று தாமே வழிபாடுகளில் பாடக்கூடிய கீர்த்தனைப் பாடல்களை இயற்றக்கூடியவர்களாகவும் இந்த ஐரோப்பிய அருட்தொண்டர்கள் திகழ்ந்தது குறிப்பிடத்தக்கது. முன்னர் சுட்டிய வீரமாமுனிவர், சீகன் பால்கு ஆகியோர் மட்டுமன்றி சாண்ட்லர் ஐயரும், இ. வெப் ஐயரும், எச்.ஏ. பாப்லி ஐயரும் இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். சாண்ட்லர் ஐயரின் 'பாவப்பாரில் உன்னத சமாதானம்' என்ற பாடலும், எட்வர்ட் வெப் எழுதிய 'பாவியாகவே வாறேன்' என்ற கீர்த்தனையும் மிகப் பிரபலமானவை. எச்.ஏ. பாப்லி ஐயர் தமிழிசைப்படி அமைந்த பல கிறிஸ்தவ தேவாரப் பாடல்களை, குறிப்பாக விவிலியத்திலுள்ள சங்கீதங்களைத் தழுவி இயற்றியுள்ளார்.

இவ்வாறாக, ஆரம்ப காலத் திருசபை வழிபாட்டில் தமிழ் மரபுப் பாடல்களைப் பாட ஊக்குவித்தமை, கீர்த்தனைப் பாடல்களின் தொகுப்பு நூல்களை வெளியிட்டமை, தாமே தமிழிசை மரபுப்படி கீர்த்தனைகளை இயற்றியமை என மூவகையில் ஐரோப்பிய அருளாளர்கள், கிறிஸ்தவக் கீர்த்தனைகளின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் நற்பங்காற்றியுள்ளனர் என்பது நாம் நெஞ்சில் நிறுத்த வேண்டிய முக்கியமானதொரு வரலாற்றுண்மையாகும்.


விளம்பரங்களை பிரசுரிக்க பதிப்பாசிரியரை தொடர்பு கொள்ளவும்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத இதழுக்காக சந்தா விபரம்

| | |
|---|---|
| மாத சந்தா | ரூ 60/- + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ரூ 600/- + நன்கொடை |
| ஆயுள்சந்தா | ரூ 3000/- + நன்கொடை |

சந்தா மற்றும் சிறப்பு திட்டங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்

நன்கொடை சந்தா செலுத்திய பின்பு செலுத்திய விபரத்தையும் உங்களுடைய முகவரியையும் மறக்காமல் கிழே கொடுக்கப்படுள்ள தொலைபேசி அல்லது மின்னஞ்சல் முகவரி மறக்காமல் தெரிவிக்க அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மின்னஞ்சல்: christianhistorical@gmail.com

தொலைபேசி: +91 9176780001



# மறைதிரு.ஜோகன்னஸ் ஃபெர்டினான்ட் காபீஸ்

J. ஜெபமணி தேவ கிருபை

ஜெர்மன் தேசத்தில் இருந்து மிஷனரியாக தமிழகத்திற்கு வருகை புரிந்து திருவள்ளூர் மாவட்டம் பாண்டூர் கிராமத்தில் சுவிசேஷ பணிகளுடன் கல்விப்பணியும் ஆற்றியவர் மறைதிரு.ஜோகன்னஸ் காபீஸ் ஐயர் அவர்கள் .

**பிறப்பும் அழைப்பும் :-**

1853 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் நாள் கிழக்கு ஜெர்மனியில் உள்ள ஒரு சிறிய நகரில் பிறந்தவர் காபீஸ் ஐயர். தந்தையார் மறைதிரு.ஹென்றி காபீஸ் ஆவார். இறையியலில் 1877 ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்றதும் அவருடன் இரண்டு போதகர்களை இணைத்து இந்தியாவிற்கு ஜெர்மன் லைஃப் சிக் மிஷனால் அனுப்பப்பட்டார்.தரங்கையில் தமிழ் மொழி கற்றார். 1893 ஆம் ஆண்டு திருவள்ளூர் பகுதியில் உள்ள கிராமங்களில் நற்செய்தி முகாம்களை நடத்தி சபைகளை நிறுவினார்.

**சுவிசேஷத்துடன் கட்டிடப் பணிகள் :-**

1903 ஆம் ஆண்டு பாண்டூரில் சுவிசேஷ பணியை ஆரம்பித்தார். ஐரோப்பிய மிஷனரிகள் தங்குவதற்கான இல்லம் கட்டுவதற்கு பாண்டூரில் 1903 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டி 1904 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் நாள் பிரதிஷ்டை செய்தார்.

அன்று முதல் காபீஸ் ஐயர் தன் குடும்பத்துடன் பாண்டூரில் தங்கினார். ஆரம்ப பள்ளி கட்டிடம், மாணவர் விடுதி, சபைகுரு இல்லம், உபதேசியார் இல்லம், 5 ஆசிரியர் குடியிருப்பு வீடுகள் ஆகியவற்றை ஒரே வளாகத்தில் 1904 ஆம் ஆண்டு கட்டி முடித்தார்.

**கதிராலயம் :-**

வேதபாட வகுப்புகள் மாலை வேளைகளில் ஓலைக்கூரையால் அமைக்கப்பட்ட ஆலயத்தில் நடத்தினார் காபீஸ் ஐயர் . ஆலய ஆராதனைகள் நடத்தப்படுவதற்கு போதிய இட வசதி இல்லாமையால் பெரிய ஆலயம் கட்டுவதற்காக ஜெர்மன் நண்பர்களிடம் பண உதவி கேட்டு கடிதம் எழுதினார். ஜெர்மன் தேசத்தில் கோதுமை அறுவடைக்கு பின் நிலத்தில் சிதறி கிடக்கும் தானிய கதிர்களை சேகரித்து விற்று பணமாக்கி அளிக்கப்பட்ட நன்கொடையை கொண்டு 1906 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அடிக்கல் நாட்டி ஆலயம் கட்டும் பணியை ஆரம்பித்து அன்றைய தினத்தில் அறுப்பின் ஸ்தோத்திர பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது.

1908 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டு கோதுமை கதிர்களை கொண்டு சேகரிக்கப்பட்ட பணத்தில் கட்டப்பட்ட ஆலயம் என்பதால் கதிராலயம் என்று பெயர் சூட்டி பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஜெர்மன் தேசத்தின் இளவரசி தெக்லா நன்கொடையாக காபீஸ் ஐயரிடம் கொடுத்தனுப்பிய ஆலய பீட உருவப்படம் பீடத்தில் வைக்கப்பட்டு இன்றும் ஆலயத்திற்கு மகிமையாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

காபீஸ் ஐயர் பெங்களூரில் 1910 ஆம் ஆண்டு வரை பணி செய்து உடல்நிலை பாதிக்கப்பட்டதால் தன் சொந்த நாடான ஜெர்மன் சென்று 1919 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இறைவனடி சேர்ந்தார்.

பாண்டூரில் கட்டப்பட்டுள்ள மேல்நிலைப் பள்ளி க்கு TELC காபீஸ் மேல்நிலைப் பள்ளி என்று பெயரிடப்பட்டு இன்று வரையிலும் காபீஸ் ஐயரின் பணிகள் போற்றப்படுகிறது.

## கர்த்தரின் பந்தியில் வா

ஞாயிற்றுக்கிழமை திருவிருந்து ஆராதனையும் மனம் நொந்த மரியான் உபதேசியாரின் பாடலும் மரியான் உபதேசியார் தம் சபையில் சிறந்த சீர்திருத்தங்களைச் செய்ய எண்ணினார். சபையின் மூப்பர் ஞானப் பிரகாசத்திற்கும் இவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. திருவிருந்திற்கு வரமறுத்தார். ஒரு ஞாயிற்றுக்கிழமை திருவிருந்து ஆராதனை மனம் நொந்தார் மரியான் உபதேசியார். ஒப்புரவு இல்லாமல் திருவிருந்தில் எவ்வாறு பங்கு கொள்வது என யோசித்தார். நண்பரின் இல்லம் சென்று ."கர்த்தரின் பந்தியில் வா , சகோதரா - கர்த்தரின் பந்தியில் வா " என்ற பாடலைப் பாடினார். மனம் நொந்த ஞானப் பிரகாசர் , இவரிடம் மன்னிப்புக் கேட்டு திருவிருந்தில் பங்கு பெற்றார். கீர்த்தனை 306 இச்செய்தியை வட ஆற்க்காடு திருப்பத்தூர் கிறிஸ்துகுல ஆஸ்ரமத்தாபகரில் ஒருவராகிய பெரியண்ணன் டாக்டர் சவரிராயன் ஏசுதாஸ் அவர்கள் ஒரு குறிப்பில் கூறியுள்ளார்.

# இந்தியாவின் முதல் மெதடிஸ்ட் அருட்பணியாளர் ஜேம்ஸ் லின்ஞ

முதல் மெதடிஸ்ட் அருட்பணியாளரான ஜேம்ஸ் லின்ஞ - James Lynch, 28,ஜனவரி, 1817 -ல் நாகையில் காலடி வைத்தார். சீகன்பால்க் கல்லறையில் ஆண்டவருக்கு நன்றி செலுத்தி, நாகையில் முதல் அருளுரையை ஆற்றினார். ஐந்து நாளிற்கு பிறகு சென்னை சென்று அருட்பணியை ஆரம்பித்தார். 1775- ல் ஜேம்ஸ் லின்ஞ அயர்லாந்தில் ரோம கத்தோலிக்க பெற்றோருக்கு மகனாக பிறந்தார். தனது 11 வது வயதில் மெதடிஸ்ட் போதனைகளால் ஈர்க்கப்பட்டார். 1808 ல் தனது 33 வது வயதில் அயர்லாந்து மெதடிஸ்ட் அருட்பணியாளர்களோடு சேர்ந்து, உபதேசியாராக பணியாற்றினார். 1813 -ல் மெதடிஸ்ட் குழு தாமஸ் குக் (Thomas Coke) தலைமையில் 6 அருட்பணியாளர்களோடு இந்தியா, இலங்கையில் அருட்பணியாற்ற கப்பலில் கிளம்பியது. துரதிஸ்டவசமாக தாமஸ் குக், மற்றும் வேறோரு அருட்பணியாளர் மனைவி கப்பல் பயணத்திலேயே மரித்தனர். கடுமையான பொருளாதார சிக்கல்களோடு 21 மே 1814 - ல் பம்பாயில் வந்து இறங்கினர். ஒரு மாதம் கழித்து 29 ஜீன் 1814-ல் இலங்கைக்கு சென்று அருட்பணியை ஆரம்பித்தனர். கல்விபணியின் மூலமாக அருட்பணியை ஜேம்ஸ் லின்ஞ யாழ்ப்பாணம் பகுதியில் சிறப்பாக செய்தார். 1816 ல் முதல் ஆங்கிலப்பள்ளியை ஜேம்ஸ் லின்ஞ யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தார். இதுவே 1897 லிருந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியாக செயல்படுகிறது. 1816-ல் மெதடிஸ்ட் அருட்பணி இயக்கம் மெதடிஸ்ட் அருட்பணியை விரிவாக்கம் செய்ய முடிவெடுத்து, சென்னை பகுதியிலும் அருட்பணியாற்ற தீர்மானித்தனர். சென்னை செல்லும்வழியில் நாகையில் ஐந்து நாட்கள் தங்கி பல்வேறு இடங்களில் இந்திய மக்களுக்கு அருளுரையாற்றினார். 3 பிப்ரவரி 1817 ல் மாலை சீகன்பால்க், புளுட்சோ கல்லறையில் ஆண்டவரை மகிமைபடுத்தி, சென்னை சென்றார். லின்ஞ சென்னை ஜார்ஜ் நகர (Black Town) ஆலயத்தில் 2 மார்ச் 1817 ல் முதல் அருளுரையை ஆற்றினார். ஏதார்த்தமாக ஜான் வெஸ்லி அவர்களின் 26 வது நினைவுநாளாக அமைந்திருந்தது. யாழ்ப்பாணத்தில் ஓரளவு தமிழ் கற்றிருந்தாலும் மொழிப்பெயர்பாளர் உதவியுடன் பணியாற்றினார். ஜீன் 1818 ல் சென்னை ராயப்பேட்டையில் முதலில் பங்களாவை வாங்கி, முதல் மெதடிஸ்ட் ஆலயத்தை 1818 ல் அதே இடத்தில் கட்டினார். 7 மார்ச் 1819 வழிப்பாட்டிற்க்காக அர்பணிக்கப்பட்டது. சென்னையில் அப்போது பணியாற்றிய LMS, CMS, Baptists அருட்பணியாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். ரேனியஸ் ஐயர் அருளுரையாற்றினார். ஜேம்ஸ் லின்ஞ தமிழ் மாகானமான யாழ்ப்பாணம், திரிகோணமலை, சென்னை பகுதிகளுக்கு தலைவராக நியமிக்கப்பட்டார். 1820 ல் நாகை, பெங்களூர், பிறகு திருச்சி பகுதிகளில் அருட்பணியை ஆரம்பித்தார். ஸ்ரீரங்கப்பட்டினம், நாகை, திருச்சி, தாமஸ் மலை, திரிபாச்சூர், வாலாஜாபாத், வேலூர் பகுதிகளுக்கும் மெதடிஸ்ட் அருட்பணி பரவியது. 1823 ல் ஜேம்ஸ் லின்ஞ அவர்களால் இராணுவத்தினருக்காக கட்டப்பட்ட சிற்றாலயம் திருச்சியில் மங்களப்படைப்பு செய்யப்பட்டது.

Black Town ல் இரண்டாவது இடம் வாங்கப்பட்டு, 700 பவுண்டு சேகரிக்கப்பட்டு ஆலயம் 25 ஏப்ரல் 1822 கட்டப்பட்டது. 20 ஆண்டிற்கு பின் இடிந்து போன ஆலயத்தை அருட்திரு. இராபர்ட் ஜோசப் (1824-1832) சென்னை அருட்பணியை பொறுப்பெடுத்தபோது மீண்டும் அழகிய ஆலயமாக கட்டினார். ஜீலை 1824 ல் பலநூறு கிறிஸ்தவர்களை கிறிஸ்துவுக்காக ஆதாயம் பண்ணிய திருப்தியுடன் அயர்லாந்து திரும்பி, அங்கு பல இடங்களில் பணியாற்றினார். வெப்பேரி, இம்மானுவேல் ஆலயம் இவரின் அருட்பணியின் சான்றாக இன்றும் காணப்படுகிறது. 21 மார்ச் 1858 ல் அயர்லாந்தில் லீட்ஸ் (Leeds) என்ற இடத்தில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அருள்திரு. இர்வின் ஞானமுத்து
தஞ்சாவூர்

## கிறித்தவக் காப்பியங்கள்

1. தேம்பாவணி - வீரமாமுனிவர் 1726
2. யோசேப்புப் புராணம் - கூழங்கைத் தம்பிரான்
3. கிறிஸ்தாயனம் - ஜான்பால்மர் 1865
4. ஞானாதிக்கராயர் காப்பியம் - சாமிநாதர் 1865
5. திருவாக்குப் புராணம் - கனகசபைப் புலவர் 1866
6. ஞானானந்த புராணம் - தொம் பிலிப்பு நாவலர் 1874
7. அர்ச். சவேரியார் காவியம் - அந்தோனிமுத்து 1877
8. பூங்காவனப் பிரளயம் - சாமுவேல் வேதநாயகம் தாமஸ் 1887
9. கிறிஸ்து மான்மியம் - ஸ்தொஷ் ஐயர் 1891
10. இரட்சணிய யாத்திரிகம் எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை 1894
11. சுவிசேட புராணம் - சுகாத்தியர் 1896
12. திருச்செல்வர் காவியம் - பூலோகசிங்க அருளப்ப நாவலர் 1896
13. திருஅவதாரம் - மாணிக்கவாசகம் ஆசீர்வாதம் 1944
14. இரட்சகராகிய இயேசு நாதர் - ஞானாபரணம் 1950
15. நசரேய புராணம் - ஜே.எஸ். ஆழ்வார் பிள்ளை
16. சுடர்மணி - ஆரோக்கியசாமி 1976
17. இயேசு காவியம் - கண்ணதாசன் 1981
18. அருளவதாரம் - வி. மரிய அந்தோனி 1983
19. மீட்பதிகாரம் - பவுல் இராமகிருட்டிணன் 1986
20. இயேசு புராணம் - ஈழத்துப் பூராடனார் 1986
21. எஸ்தர் காவியம் - இராபின்சன் குரூசோ 1986
22. மோட்சப்பயணக் காவியம் - ஏ.த. ஜோதிநாயகம் 1991
23. அன்னை தெரேசா காவியம் - துரை. மாலிறையன் 1996
24. அருள்நிறை மரியம்மைக் காவியம் - துரை. மாலிறையன் 1996
25. அருட்காவியம் - மதலை முத்து 1999
26. மீட்பரசி - லோட்டஸ் எடிசன் 2002
27. பவுலடியார் பாவியம் - ம. யோவேல் 2003
28. உலகஜோதி - இறையரசன் 2005
29. திருத்தொண்டர் காப்பியம் - சூ. இன்னாசி 2007
30. ஆதியாகம காவியம் - சா. சாமிமுத்து 2008

# வரலாற்றுப் பயணங்கள் ....



மாதபத்திரிக்கையை டிக்கன். இஸ்ரவேல் அவர்களுக்கு
அறிமுகப்பட்டுத்தியபோது



தூத்துக்குடி நாசரேத் திருமண்டல கிறிஸ்தியான் நகர சேகர தலைவர்
அருள்திரு.செல்வன் மகாராஜா ஐயா அவர்களுடன்
வரலாற்று சங்க குழுவினர்கள்



மாதபத்திரிக்கையை அருள்திரு. சாமுவேல் ஐயா
அவர்களுக்கு அறிமுகப்படுத்தியபோது



திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்க நண்பர்கள் அருள்திரு
ஜான் சாமுவேல் ஐயா அவர்கள் மற்றும் அருள்திரு காட்சன்
சாமுவேல் ஐயா அவர்களுடன்



மாதபத்திரிக்கையை அருள்திரு. பால் ஐயா அவர்களுக்கு
அறிமுகப்படுத்தியபோது



திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்க நண்பர்கள்
அருள்திரு. சாமுவேல் ஜெயசீலன் அவர்களுடன்

# நவம்பர் மாதம் பிறந்த நாள் கொண்டாடும் மிசனரிகள், பாடலாசிரியர்கள்,குருவானவர்கள்

Vedamuthu Nallathambi Pouniah
Charles Theophilus Ewald Rhenius
Asirvadam Vedamanikkum
Masillamani Abraham Samuel
Constantine Joseph Beschi
Frederick Barrow Matthews
Ponniah Raj Vanniaperumal
John Nelson Hyde
John Thomas
Wells Frank
Devadason Jesudian Michael
Yagappan Jacob
Moore Edward Alfred Livingstone
Basil Mathuswami
Chelliah Edward Asirvatham Dason
Robert Sinclair
Visuvasam Nallathambi
Harry bathurst Norman
Samuel Swamiadian Daniel
George Billing
Gnanamalai Gnananmuthu Rajapandiyan
Abraham Arulanadam Carr
Abraham Vedakkan
Abraham Issac
Jivanadam Moses
Martin Luther

## நவம்பர் மாதம் நினைவு நாளை ஆசரிக்கும் மிசனரிகள், பாடலாசிரியர்கள்,குருவானவர்கள்

Maduranayagam,daniel
Jesudasan John Abraham
James Hough
Thomas Arthur Heber
Amirthanayagam Daniel
James Hoff
Vedamuthu Yesudian Pakkianathan
Solomon Samuel Daniel Abraham
Arulanandam Savarimuthu
Samuel Morley
George Williams (YMCA)
John Christian Frederick Heyer
Sister Grace Violet Aaron
Swamidas Vedamanikkum
Abraham John Thomas Benja-
min
Adolphus Noah
Frost John Ernest Langley
Johannes Sandegren
Carl Ochs
ANTHONY WATSON BROUGH
Harris Devasagayam Jesudian
Jessie Winifred Inglis
Pakkianathan Suviseshamuthu
Grineith John
Newbery Herbert Edward Lightfoot
SR I KIRUBY
Yesudian Gnanamuthu
Maduranayagam Samuel Gnanamani
Muthuswami Devaprasadam
Navamani Yesudian Coilpillai
Masillamani Pakkianathan
Samuel Devasagam
Vedakkan Solomon
Daniel Paul
Frederick James West-
ern
Henry James Schaffter
Arthur Davasagayam Koilpillai
Benjamin Schultze
Jebaganamam Arulanandam
Charles Egbert Kennet
Samuel John
Devadason Arumai Vedanayagam

# இராச கிளாரிந்தா

கிறித்தவ வரலாற்றில் பெண்தலைமைத்துவ ஆளுமை

ஜான்சி பால்ராஜ், டோனாவூர்

பதினெட்டாம் நூற்றாண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடியில் டச்சுக்காரர்கள் எழுப்பிய டச்சு ஆலயத்தைத் தவிர்த்து திருநெல்வேலியில் தோன்றிய முதல் சீர்திருத்த ( Protestant) கிறித்தவ ஆலயத்தைக் கட்டிய கிளாரிந்தா என்ற பெண்ணின் தலைமைத்துவப் பண்பு இன்றும் நம்மால் கிரகிக்க இயலாத ஆளுமைத் தன்மை கொண்டதாகவே உயர்ந்து நிற்கிறது!

இந்தியாவில் பெண் தலைமைத்துவம் என்பது ஆண் தலைமைத்துவத்திற்கு இணையாக குடும்பம், சமூகம், பொருளாதாரம், அரசியல் என்று எந்த தளத்திலும் இன்றுவரை முழுமையாக ஏற்கப்படாத நிலையில் ,18 ஆம் நூற்றாண்டில் பெண்களின் நிலை எவ்வாறு இருந்திருக்கும் என்பதை கற்பனையிலும் நினைத்துப் பார்த்து எழுத்தில் அவற்றை விவரித்துவிடுவது எளிதல்ல...!

பெண்ணினம் ஆணினத்தின் தேவைகளைப் பூர்த்திச் செய்யும் ஓர் உடைமையாக மட்டுமே பார்க்கப்பட்டதோடு எவ்விதத்திலும் ஆணுக்கிணையானவளாக யாராலும் உணரப்பட்டுவிடக் கூடாதென்ற முன்னெச்சரிக்கையோடும் பெண் தன்னை உணர்ந்து தனது திறமைகளை, தனித்தன்மைகளை வெளிப்படுத்திவிடக் கூடாதென்பதிலும் அதிக சிரத்தையெடுத்து அடிமையென்ற நிலைக்குள் அவளைத் தள்ளி, பண்பாடு, கலாச்சாரம், கற்பு என்ற பெயர்களில் பூட்டுப் போட்டு அடைத்து வைத்திருந்தது....!

அதிலும் இந்தியப் பெண்களுக்கெதிரான கொடுமைகளின் அடர்வு அவர்கள் சார்ந்திருந்த சாதி சமயங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. உயர்சாதியினராக கருதப்பட்டவர்கள் மற்றச் சாதியினரைக் காட்டிலும் அதிக அளவிலான கட்டுப்பாடுகளைத் தங்களுக்கென்று ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். இந்தக் கட்டுப்பாடுகளென்ற சமூகக் கொடுமைகளுக்குப் பலி கிடாக்களாக பெரும்பாலும் பெண்களையே பயன்படுத்தி வந்தனர். இந்நிலையில் கிளாரிந்தா அம்மையாரும் அன்றைய உயர்குடியினராக கருதப்பட்ட பிராமண பிரிவில் பிறந்தவரே.!

கோகிலா என்ற இயற்பெயரை உடையவரான கிளாரிந்தா, மகாராஷ்டிர வம்சத்தைச் சேர்ந்தவர்.இளம் வயதிலேயே (கி.பி 1770) துளசாசி மன்னரின் அரண்மனையில் அதிகாரியாக இருந்த ஒருவருக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டார்.ஆனால் சில ஆண்டுகளில் அவரது கணவர் மரணமடைந்ததால் இளம் வயதிலேயே கைம்பெண் ஆனார்.அப்போது கணவர் இறந்தவுடன் மனைவியை உடன்கட்டை ஏற்றிக் கொல்லும் பழக்கம் தஞ்சாவூர் அரச பரம்பரையில் இருந்து வந்தது. அதன்படி கோகிலாவை எரிந்து கொண்டிருக்கும் சிதையில் ஏற்ற முற்பட்ட போது ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனிப் படையின் அதிகாரி ஹென்றி லிட்டில்டன் (Henry Lyttilton)என்பவர் இதைக் காணநேரிட மனிதாபிமானத்தோடு அப்பெண்ணை அச்சிதையிலிருந்து தூக்கிச் சென்று காப்பாற்றினார். இதனை வெறுத்த பிராமணர்கள், வைதீகப் பிராமண சமுதாயத்திலிருந்து அவளுக்கு விலக்கு அளித்தனர்.ஆதரவற்ற இளம்பெண்ணான கிளாரிந்தா லிட்டில்டனின் அன்பில் இணைந்து கொண்டார்.சில காலத்தில் இருவரும் உண்மையான அன்புடன் கணவனும் மனைவியுமாக வாழ்ந்தனர். பின்னர் லிட்டில்டன் பாளையங்கோட்டைக்கு இடமாற்றம் செய்யப்பட்டபோது கிளாரிந்தாவும் அவருடன் வந்தார்.லிட்டில்டன் கிளாரிந்தாவிற்குத் தனது அன்பை மட்டுமல்லாமல் இயேசு கிறிஸ்துவின் முழு அன்பையும் விவிலியக் கொள்கைகளையும் குறித்து போதித்திருக்கிறார்...! இதற்கு பின்னாட்களில் கிளாரிந்தாவின் வாழ்க்கையே சாட்சி பகர்ந்தது.



ஆனால் கொடுமையான சூலை என்ற நோயால் பாதிக்கப்பட்டு சில ஆண்டுகளில் லிட்டில்டன் இறந்து போனார். கிளாரிந்தாவின் உண்மையான அன்பிற்குப் பரிசாக தமது சொத்துக்கள் முழுமையையும் கிளாரிந்தாவிற்கே எழுதி வைத்திருந்தார் லிட்டில்டன்.

தன்னந்தனியாக விடப்பட்ட கிளாரிந்தா லிட்டில்டன் மூலம் பெற்ற கிறிஸ்து ஏசுவின் அன்பால் ஆறா துயரினின்று மீண்டெழுந்தார். லிட்டில்டன் அவருக்கு வழங்கிய சொத்துக்களால் மிகுந்த செல்வச் சீமாட்டியாக இருந்த கிளாரிந்தா, தனதுவாழ்வையும் செல்வத்தையும் இறைப்பணி மற்றும் சமூகப் பணிக்காகவுமே செலவிட்டார்.

ஸ்வாட்சு ஐயர் மூலம் ஞானஸ்தானம் பெற்ற கிளாரிந்தா , சீர்திருத்த சபையை நிறுவி ஆலயம் கட்ட தீர்மானித்தார்.கி.பி1785 ஆம் ஆண்டு ஆலயத்தைக் கட்டிமுடித்தார்.கிளாரிந்தாவால் கட்டப்பட்ட இவ்வாலயமே திருநெல்வேலியில் தோன்றிய முதல் சீர்திருத்த ஆலயம் என்ற சிறப்பிற்குரியதானது.

அக்கால கட்டத்தில் கணவனை இழந்த கைம்பெண்களின் நிலைமை மிகக் கொடூரமானதாக இருந்தது. அதிலும் சிதையிலிருந்து காப்பாற்றப்பட்ட பெண்ணின் மீதான சமூகப்பார்வை எப்படியிருந்திருக்கும் என்று கற்பனை செய்தால் கூட வேதனையில் கசக்கிறது மனம்..! ஆனால் அப்பார்வைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் தூக்கியெறிந்த கிளாரிந்தா தனக்குள் எரிந்த கிறிஸ்துவின் அன்பை பிறருக்குள் பற்றவைக்க எழுந்தார்.அவருக்குள்

சுடர்விட்ட இலட்சியத்தீ சமூகத்தில் அவர்மீதான மிக மோசமான தாக்குதல்களையெல்லாம் எளிதில் அல்லல் தட்டி, அவரது உள்ளுணர்வில் தலைமைத்துவத்தை விழித்துக் கொள்ள வைத்தது…!

தலைமைத்துவம் என்றாலே இன்று, தனக்கு கீழான சமூக அந்தஸ்துடையோரை அல்லது நிறுவன நிலைகளில் பங்காற்றுவோரை அடக்கி ஆள்வது தான் என்ற நிலைப்பாட்டில் நிறையபேர் தங்களது ஆதிக்கத்தை திணித்து ,தங்களது தலைமைத்துவத்தை பிறரறிய கூவிக்கொண்டலைகிறார்கள்.



ஆனால் உண்மையான தலைமைத்துவம் என்பது ‘அசாதாரணமான ஒரு விஷயத்தை நிகழ்த்திக்காட்டும்பொருட்டு மக்கள் பங்களிப்பதற்கான வழியை உருவாக்குவது பற்றியதே’ என்று கிரீன்டெக்கின் ஆலன் கீத் என்பவர் குறிப்பிடுகிறார்.

ஆம் ,அத்தகைய மகத்தான தலைமைப் பண்புகளையே கிளாரிந்தா அம்மையார் கொண்டிருந்தார்.

சமயப்பணிக்காகவும் சமூகச் சீர்திருத்தப் பணிகளுக்காகவும் தன்னோடிருந்தவர்களை ஒருங்கிணைத்து தான் மேற்கொண்ட பணிகளைக் கச்சிதமாக செய்து முடிக்கும் திறனைப் பெற்றிருந்தார், கிளாரிந்தா.

தாம் கட்டிய ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்ய திருச்சிராப்பள்ளியிலிருந்த போதகர் சுவாட்சு ஐயரை நேரில் சென்று , கண்டு பேசி ஆலயத்தை பிரதிஷ்டை செய்து தரும்படியாகக் கேட்டிருக்கிறார். எதிலும் தன்னை முதன்மைப்படுத்த முயலாத அவரது இந்த ஆளுமை, அவரின் தலைமைத்துவத்தை மேலும் மெருகேற்றியதை வெளிப்படுத்துகிறது.

அதைப்போன்றே கி.பி1773 ஆண்டில் ஜேசு சபை கலைக்கப்பட்டதால் கத்தோலிக்க கிறித்தவர்கள் அதுவரை தங்களை வழிநடத்திய பாதிரியார்களின்றி கலங்கி நின்ற தருணத்திலும்

கிளாரிந்தா மிக நுட்பமான அறிவுடன் ‘அவர்களுள் சிலருடன் உரையாடி

சீர்திருத்தக் கிறித்தவ சபையில் சேரும்படி செய்தார் .அதுமட்டுமின்றி தமது வீட்டிலேயே முறைப்படியான, ஆராய்ச்சிசார்ந்த நுணுக்கமான கலந்தாய்வுகள், கருத்தரங்குள் நடத்தியதற்கான சான்றுகள் இருப்பதாக பேராசிரியர் கரோலின் ஜெபத்துரை தனது நூலில் குறிப்பிடுகிறார்.

சபை பிரிவினைகளையும் அவற்றிற்கிடையேயான கொள்கை மாற்றங்களையும் கருத்தில் கொண்டு இன்றும் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அன்றைய சூழ்நிலையில் அவரது அம்முயற்சிகள் முற்போக்கான அவரது சிந்தனைகளையே வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

தான் ஏற்படுத்திய சபைக்கு ஒரு உபதேசியாரை அனுப்ப வேண்டி நடைப்பயணமாகவே தனது வளர்ப்பு மகன் ஹென்றி லிட்டில்டன் மற்றும் சிலருடன் இணைந்து பாளையங்கோட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்வாட்சு ஐயரை நேரில் காண சென்றவர் இவ் வீரமங்கை. கிளாரிந்தாவின் ஆழமான ஆர்வத்தைக் கண்டு வியந்து போயிருக்க வேண்டும் ஸ்வாட்சு ஐயா…! அவரெடுத்த அச்சீரிய முயற்சியினால் தான் மிகச் சிறந்த

இறைத் தொண்டரான கற்பகம் சத்தியநாதன் என்ற உபதேசியாரை கி.பி1785 ஆம் ஆண்டு பாளையங்கோட்டைக்கு அனுப்பி வைத்தார்.

எதை ,எப்படி ,எச்சூழலில் செய்யவேண்டும் என்ற நுட்பமான அணுகுமுறை அவரது உயர்ந்த தலைமைத்துவத்தின் உட்கூறாக அமயப் பெற்றிருந்ததை இன்றும் பறைசாற்றி நிற்கின்றது அவரது வியத்தகுப் பண்புகள்.

உயர்குலத்தவராக தங்களைக் கூறிக்கொண்ட ஒருசாரார் மட்டுமே கல்விக் கற்க முடிந்த அந்நாட்களில் எவ்விதப் பாகுபாடுமின்றி அனைவரும் கல்விக் கற்கும் வகையில் தனது வீட்டிலேயே திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்றை அமைத்து அதற்கு ஆசிரியரையும் நியமித்து அவருக்கு ஊதியமும் கொடுத்திருக்கிறார். அவரது தலைமைத்துவம் பின்னாட்களில் திருச்சபையின் தூண்களாக விளங்கிய நிறைய தலைமைத்துவங்களை எழுப்பிவிட்டது.

கிளாரிந்தாவின் சமயப் பணியினால் உருவான அந்த முதல் சபையில் 40 பேர் அங்கத்தினர்களாக இருந்தனர். அவர்கள் 13 வேறுபட்ட சாதியினராவர். சாதியத்தை இந்தியாவில் விதைத்தக் குலத்தில் பிறந்த கிளாரிந்தா சாதிப்பிரிவினையை எதிர்த்து அதை தனது செயலில் காண்பித்து பெரும் புரட்சி செய்திருக்கிறார். . .! இதுபோல் அவரது தலைமைத்துவ ஆளுமைக்கு உதாரணமாக இன்னும் நிறைய மிச்சமுண்டு!

அவரது பணிகளை கனபடுத்திய சகல அதிகாரத்திற்கும் துரைத்தனங்களுக்கும் தலைவரான நம் தேவாதி தேவன் கிளாரிதாவே திருநெல்வேலி திருச்சபையின் தாய் என்ற உயரிய இடத்தை அளித்திருக்கிறார்.

திருநெல்வேலி திருச்சபை வரலாற்றை மட்டுமல்ல இந்திய கிறித்தவ வரலாற்றை மிகச் சரியாக எழுதவோ அறிந்திடவோ விளைவோர் எவரும் கிளாரிந்தா என்ற புரட்சி நாயகியை கண்டு கொள்ளாமல் போக முடியாது என்பது உண்மை.


**திருச்சபை வரலாறு, மிஷனரிகள் வரலாறு, பாடல் வரலாறு, ஆய்வுகள், வரலாற்று புகைப்படங்கள், வரலாற்று பொக்கிஷங்கள் இன்னும் பல சுவாரஸ்யமான தகவல்கள், கட்டுரைகள், வரலாற்றுப் புத்தகங்கள் இன்னும் பல அரிய தகவல்களுடன்.**

*journals.tchsportal.co.in*

அருள்திரு.முனைவர். ராஜசேகரன்
திருச்சி

# சீர்திருத்தம்

## அன்று அவசியம் இன்று அவசரம்

**முன்னுரை**

சீர்த்திருத்தம் என்பது ஒழுங்கற்ற ஒன்றை ஒழுங்குபடுத்துவதாகும். இந்த பூமி ஒழுங்கின்மையாக இருந்தபோது, கடவுள் அதனை ஒழுங்குபடுத்தினார். ஏற்கனவே ஒரு ஒழுங்கில் உருவாக்கப்பட்ட ஒன்று அதன் ஒழுங்கிலிருந்து விலகி போனதை சீரழிவு என்று அழைக்கிறோம். அதனை மீண்டும் பழைய ஒழுங்கிற்கு கொண்டுவருவதை சீர்த்திருத்தம் என்கிறோம். கடவுளே அனைத்தையும் சீர்ப்படுத்துகிறவர். கடவுளுடைய படைப்புகளில் மகுடமான மனிதன் சீர்கெட்டுப்போனதால் அவனை சீர்ப்படுத்த பல்வேறு வழிமுறைகளையும், பல்வேறு மனிதர்களையும் பயன்படுத்தினார். கடவுள் படைப்பாளியாக மாத்திரம் அல்லாமல் சீர்த்திருத்தவாதியாகவும் இருக்கிறார். பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, கடவுள் திருச்சபை ஊழியர்களை ஏற்படுத்தினார் எபேசியர் 4:11-12. தன் சொந்த இரத்தத்தையும் மாம்சத்தையும் விலைக்கிரயமாகக் கொடுத்து மீட்டெடுத்த திருச்சபையை கட்டுகிற இயேசு அதனை சீரழியாமல் பாதுகாக்கிறார், அதற்கு எதிராக வரும் எதனையும் அழித்துவிடுகிறார் மத்தேயு 16:18. சீரழியும் உலகைக் காக்கவே மீட்டெடுக்கப்பட்ட மக்களாக திருச்சபையை ஏற்படுத்தினார்.

**சீர்த்திருத்தம் அவசியம் அன்று**

கிபி. முதலாம் நூற்றாண்டில்: சத்தியத்தை ஏற்காமல், அதன் வழிகாட்டுதலின்படி வாழாமல், சமய சடங்குகளை நிறைவேற்றினால் இரட்சிப்பை அடையலாம் என்ற தவறான சிந்தை கொண்டிருந்தவர்களிடம் யோவான் ஸ்நானகன் ‘விரியன் பாம்புக்குட்டிகளே! மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனியை கொடுக்க வேண்டும் என்றான். புதிய ஏற்பாட்டு திருச்சபை ‘அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.’ (அப்போஸ்தலர் 2:42). இப்படி வளர்ந்த சபை மனமாற்றம் பெறாமல் இரட்சிப்பின் அனுபவமில்லாமல் கூட்டமாக வந்தவர்களை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தபோது, திருச்சபை தலைவர்களின் பிரிவினைகளால் சீரழிவை சந்திக்க நேர்ந்தது என்று பவுல் விளக்குகிறார் 1கொரிந்தியர் 1:10-13.

கிபி. நான்காம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன் நோபுல் என்ற ரோமப் பேரரசன் கிறிஸ்தவனாக மாறினான். இயேசுவால் போதித்து காட்டி உருவான கிறிஸ்தவ மார்க்கத்தை ஒரு மதமாக மாற்றி அதற்கு தானே தலைவனானான். அவனே கிறிஸ்தவ வேதத்தை தொகுக்கவும், விதிமுறைகளை ஏற்படுத்தவும் தனது கட்டுப்பாட்டிற்குள் உள்ளவர்களை நியமித்தான், யூதர்களால் எழுதப்பட்ட நூல்களுக்கு அதனை எழுதாத ஐரோப்பியர்களால் விளக்கம் கொடுக்கப்பட்டது. கிறிஸ்தவத்தை அழிக்க முயற்சி செய்த ரோமர்களின் கட்டுப்பாட்டிற்குள் கிறிஸ்தவம் வந்தது. அரசாங்கம் திருச்சபை இரண்டையும் ஒரே தலைமையின் கீழ் கொண்டு வந்து திருச்சபை தெருச்சபையாக மாறுவதற்கு வித்திட்டான். ஆவியின் பண்புகளுக்கு எதிரான பாரம்பரியம், பண்டிகைகள், சடங்குகள், பரிசுத்தவான்கள் பயன்படுத்திய பொருட்களை புனிதமாக பாவித்தல் போன்ற இயேசு எதிர்த்த காரியங்களை அவசியமானதாக கொண்டுவந்தார்கள். அரசியல் கலந்த ஆன்மிகமே மதமாக மாறுகிறது. மதத்தில் உள்ள சீரழிவே சமுதாய சீரழிவிற்கு வித்தாக அமைகிறது.

கிபி. 16ம் நூற்றாண்டில் சபை சீரழிவின் உச்சத்தில் இருந்தது. போப் ஒரு தேசத்திற்கும் ஒரு மதத்திற்கும் தலைவராக இருந்துகொண்டு இரண்டு எஜமானனாக ஊழியம் செய்தார். அதிம்சைக்குப் பதில் சிலுவைப்போர் வன்முறையும், ஆன்மிகத்தின் அடையாளமாக துறவறமும் போற்றப்பட்டது. பிலாத்து அரண்மனையில் இயேசு ஏறிய படிக்கட்டுகளில் முழங்காலில் ஏறினால் பாவங்கள் மன்னிக்கப்படும், படிக்கட்டிலிருந்து கர்த்தருடைய ஜெபத்தை சொன்னால் உத்தரிக்கும் ஸ்தலத்தில் உள்ள ஒவ்வொரு குடும்ப நபரும் விடுவிக்கப்படுவர், பாவமன்னிப்பு சீட்டை அதிக விலைக்கொடுத்து வாங்குவோருக்கும் அவருடைய குடும்பத்தில் மரித்த உறவினர்களும் செய்த, செய்துகொண்டிருக்கிற மற்றும் செய்யப்போகும் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படுகிறது, திருவிருந்தில் பரிமாறப்படும் அப்பம் இயேசுவின் மாம்சமாகவும், திராட்சைரசம் இயேசுவின் இரத்தமாகவும் மாறுகிறது போன்ற தவறான உபதேசங்கள் திருச்சபையை சீரழித்துக்கொண்டிருந்தன. போப்புதான் வேதத்தை வியாக்கியானம் செய்வதில் இறுதி அதிகாரம் கொண்டிருந்தார். ஆயர்கள் சுகபோக வாழ்வில் தழைத்திருந்தனர்.

**மார்ட்டின் லூத்தர்**

மேலே சொல்லப்பட்ட அனைத்து சீரழிவுகளுக்கும் மூலக்காரணராயிருந்த போப்பை எதிர்த்து கி.பி.1517ம் ஆண்டு அக்டோபர் 31ம் தேதியன்று விட்டன்பர்க் அரண்மனை ஆலய வடபுறக் கதவில் 95 நியாயங்கள் கொண்ட ஒரு அறிக்கையை ஒட்டினார். இந்நாளையே சீர்த்திருத்த திருச்சபை, சீர்த்திருத்த திருநாளாக கொண்டாடிவருகிறது. இதனை வாசித்த மக்கள் அதன் நகல்கள் எழுதி நாடெங்கும் பரப்பினார்கள். இதனால் பாவமன்னிப்பு சீட்டு வியாபாரம் படுத்துவிட்டது. போப்பின் அதிகார ஆணையையும், சடங்காச்சாரப் புத்தகங்களையும் லூத்தர் சுட்டெரித்தார். கொலை மிரட்டலுக்கு பயந்து ஒளித்துவைக்கப்பட்ட காலத்தில் லூத்தர்

வேதாகமத்தை ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்தார். 1530, ஜுன் 25ம் தேதி லூத்தர் அவருடைய விசுவாச அறிக்கையை சமர்ப்பித்தார். துறவறத்தின் மூலம் இரட்சிப்பு இல்லை என்பதால் கேத்தரீன் என்ற பெண் துறவியை திருமணம் முடித்தார். 350க்கும் மேலாக புத்தகங்களை எழுதி சீர்த்திருத்தத்தை வளர்த்தார். இவருடைய எழுத்துக்கள் அநேக சீர்த்திருத்தவாதிகள் உருவாவதற்கும் காரணமாகவும் வழிகாட்டியாகவும் அமைந்தது. ஜெர்மன் நாடெங்கும் பரவிய இந்நற்செய்தி ஐரோப்பா முழுவதும் பரவியது, பின்பு உலமெங்கும் பரவியது.

**சீர்த்திருத்தம் அவசரம் இன்று**

சீர்த்திருத்த சபையின் 500 வருட வரலாற்றை திரும்பிப் பார்க்கும் போது ஸ்தல சபைகளின் எண்ணிக்கை புற்றீசலைப்போலவும் காளான் போலவும் வளர்கிற ஒவ்வொன்றிற்கும் தானே இறுதி அதிகாரம் என்னும் அறியாமையின் ஆணவத்தோடு செயல்படும் போப்பாண்டவர்கள் பெருகிவிட்டார்கள். இயேசு வாழ்ந்த இடத்தை பார்த்து வரும் புணித பயணத்திற்காக இடைதரகர்கள், பணத்தை மையமாகக்கொண்ட ஊழியங்கள் ஊழியர்கள், இவர்களை தெய்வமாக பார்க்கும் மக்கள், இவர்கள் ஏற்படுத்திய ஆலயங்கள், தோட்டங்கள், கோபுரங்கள், வாசல்கள், சபை கட்டிடங்களை சொர்க்கமாக பாவிக்கும் பொதுஜனங்கள், அறியாமையையும் குறுக்குவழியில் ஆசைகளை நிறைவேற்றும் மக்களை கைக்குள் வைத்துக்கொண்டு, சுகபோக வாழ்கை வாழும் தன்னிச்சை ஊழியர்களும் ஊழியங்களும் பெருகிவிட்டன.

உட்பூசல் காரணமாக அனுதினமும் நீதிமன்றங்களுக்கு சென்று மக்களின் காணிக்கைகளை விரயமாக்குவதும், பொறுப்பில் இருக்கையில் பதவிகளுக்காக திறமைகள் மற்றும் நேரத்தை வீணாக்குவது, தொலைதூர தரிசனங்களோடு மிஷனெரிகள் ஊழியங்களுக்காக வாங்கிப்போட்ட நிலங்களை விற்பதும் அபகரிப்பதும், வேலை கொடுப்பதற்கும், பணியிட மாற்றங்களுக்கும் லஞ்சம் வாங்குவதும், ஜாதியின் பெயரில் சபை, போன்ற சீரழிவுகள் மெயின்லைன் திருச்சபைகளில் பெருகிக்கொண்டிருக்கிறது. விடுதலை இறையியல் என்று பேசும் (இவர்களிடம்) மக்கள் என்றும் அடிமைகளாகவே இருக்கிறார்கள்.

**மூடநம்பிக்கை:**

ஜெப எண்ணெய், ஜெப கைகுட்டை, குணமளிக்கும் பத்திரிக்கை, பெயர் சொல்லிக்கூப்பிடும் கூட்டங்கள், குறிச்சொல்லும் தீர்க்கதரிசனம், ஒருவருக்கும் புரியாத பிரயோஜனமற்ற பரவசப்பேச்சான அன்னியபாஷைகள், சாட்சி சொன்னால் அற்புதம், ஊழியத்திற்கு கட்டிடம் கட்ட, பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி நடத்த காணிக்கை கொடுத்தால் அற்புதம், அன்றாடம் சொர்க்கம் மற்றும் நரகம் சென்று வரும் ஊழியர்களின் அனுபவம் உபதேசமாகிவிட்டது. காமத்திற்கும், சொகுசு வாழ்விற்கும், பணத்திற்கும், பதவிக்கும், புகழுக்கும் அடிமையாகும் ஊழியர்கள், முறையான இறையியல் கல்வியின்மை, அரசுக்கு கணக்கு காட்டாத சுயாதின ஊழியங்கள் கிறிஸ்தவத்தின் அடிப்படை அடையாளத்தை மாற்றிவிட்டது. பரிசுத்தமின்மை, பலியாக ஒப்புக்கொடத நிலை, புத்தியில்லாத ஆராதனை, பிரபஞ்சத்தை பின்பற்றுதல், புதிதாகாமல் பழையனவாகவே இருத்தல் போன்ற பல்வேறு காரணங்கள் சீர்த்திருத்த திருச்சபையின் சீர்த்திருத்தத்தின் அவசரசத்தைக் காட்டுகிறது.

**சீரழியும் சீர்த்திருத்த சபைகளுக்கு சீர்த்திருத்தங்கள்**

**விசுவாசம்:**

நமது விசுவாசம் நம்மால் அல்லது திருச்சபையின் போதனைகளால் துவங்கப்படாமல் இயேசுவால் துவக்கப்பட்டிருக்க வேண்டும். அவர் துவக்கும் விசுவாசத்தை அவர் பூரணமாக்குவார். நமது விசுவாசம் சத்தியம் என்னும் நிஜத்தில் இருக்கவேண்டும், சடங்கு அல்லது சாக்கிரமந்து என்னும் நிழல்களில் இருக்கக்கூடாது.

**வியாக்கியானம்:**

வேதத்தின் ஆக்கியோனாகிய பரிசுத்த ஆவியானவரின் துனையோடு அவர் சொல்ல வருகிற அர்த்தத்தோடு வேதத்தைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப வாழவேண்டும். சரியான வேதவியாக்கியானமே சரியாக வேதத்தை விளங்கிக்கொள்ள உதவும், அதுவே சரியான விளைவை ஏற்படுத்தும். பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு சபைக்கு ஏற்ப வியாக்கியானம் கொடுப்பவரா அல்லது சத்தியத்திற்கு ஏற்ப விளக்கம் கொடுப்பவரா?

**விவாதங்கள்:**

இரட்சிக்க திராணியற்ற சாக்கிரமந்துகளாகிய ஞானாஸ்நானத்தில் எது உகந்தது என்ற வாதம், சப்தத்தை உயர்த்தி, இசைக்கருவிகளை வேகமாக இசைத்துதான் ஆராதிக்க வேண்டும் என்பதும், நகைகள் அணியலாமா? வெண்ணிற ஆடைதான் உடுத்தவேண்டுமா? மனவாட்டியாகிய திருச்சபை தாடி மீசை வைக்கலாமா? போன்ற விவாதங்கள் எந்தவிதத்தில் திருச்சபை ஸ்திரத்திற்கும் பெருக்கத்திற்கும் உதவும் என்று சிந்திக்கவேண்டும். இயேசுவைப் போல வாழ்வதில் உள்ள நடைமுறை சிக்கல்களை விவாதிப்பதும், நற்செய்தியை இக்காலத்திற்கு ஏற்ப எப்படி அறிவிக்கலாம் என்றும், திருச்சபைக்கு வெளியிலிருப்பவர்கள் திருச்சபையைப் பற்றி சொல்லும் குறைகளை எப்படி களையலாம் என்றும், அதற்கு எப்படி தற்காப்பு பதிலுரை சொல்லலாம் என்றும் ஆக்கப்பூர்வமான விவாதங்ளை மேற்கொள்ளவேண்டும்.

**முடிவுரை**

திருச்சபை என்ற வயிற்றிற்கு சீர்த்திருத்தம் என்ற பசி அவ்வப்போது ஏற்படும்போது அதற்கான போஷாக்கு நிறைந்த உணவை கொடுக்கவேண்டும். அந்த உணவு இயேசுவின் வாழ்வும் வார்த்தைளுமாம். சாப்பிட்ட சாப்பாடு ஜீரனமாவதற்கு உழைப்பு அவசிமாயிருப்பது போல் திருச்சபை எடுத்துக்கொள்ளுகிற சத்தியத்தை மற்றவர்களுக்கு வாழ்வின் வழியே உபதேசித்தால் அது பெலப்படும், அப்பெலத்தினால் பல்வேறு திருச்சபைகள் உருவாகும். பெற்றெடுக்காதவளைத் தாய் என்று அழைக்கமுடியாது, அதுபோலவே திருச்சபைகளை ஸ்தாபிக்காத திருச்சபையை மலட்டு சபை என்றுதான் அழைக்கமுடியும். சீர்த்திருத்தம் பெற்ற திருச்சபைகள் தங்களுடைய சீர்த்திருத்தத்தை விசுவாசத்தின் வழியே, வேதத்தை சரியான வழியில் வியாக்கியானம் செய்வதன் வழியே, அதனை ஏற்ற விவாதங்களின் வழியே உறுதிசெய்யவேண்டும். சீர்த்திருத்த சபையே சமூகத்தை சீர்த்திருத்தமுடியயும்.

# வெஸ்யன் மெத்தடிஸ்ட் மிஷன் வரலாறு

2

வெ. டேனியல் மோகன்ராஜ்
திருவள்ளூர்



அருட்திரு. ஜான் வெஸ்லியின் உத்வேகம் மற்றும் அவருடன் இருந்தவர்களை மெதோடிஸ்ட்கள் என ஏன் அழைத்தனர் மேலும் வெஸ்லியன் என யாரை அழைத்தனர் என்று கடந்த இதழில் படித்தோம். இவ்விதழில் இந்தியாவிற்கு வெஸ்லியன் மிஷன் எப்படி வந்தடைந்தது அவர்களின் நோக்கம் என்ன என்பதை இன்று தெரிந்துகொள்வோம்

மெத்தடிஸ்ட் வரலாற்றாசிரியர்கள் ஜான் வெஸ்லியின் தாயார் திருமதி. சுசன்னா மற்றும் தந்தை சாமுவேல் வெஸ்லிக்கு பிறந்த மிக சிறந்த 'ஆன்மீக வாரிசு' என குறிப்பிட்டுள்ளனர். ஏனெனில் பெற்றோர்களுக்கு பிறந்த அநேக குழந்தைகள் இருப்பினும் தங்களது இருதயத்தின் ஆழ்ந்த விருப்பமான ஊழிய பணியை ஜான் வெஸ்லி தேர்ந்தெடுத்து அதில் ஒரு மாபெரும் சீர்திருத்தத்தை கொண்டு வந்ததால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியாவிற்கான இந்த மிஷன் இணைப்பு நம்மை 1706க்கு அழைத்துச் செல்கிறது, அப்போது ஜான் வெஸ்லி மூன்று வயதாக இருந்தார். இந்தியாவுக்கான முதல் ப்ரோட்டஸ்டண்ட் மிஷனரிகளான பார்தலோமெவ் சீகன்பால்க் மற்றும் ஹென்றி ப்ளுட்சாவ் ஆகியோர் 1706 ஜுலை மாதம் தரங்கம்பாடிக்கு வந்தனர். இச்சம்பவத்தை ஒரு சில ஆண்டுகளுக்குப் பிறகு ஜான் வெஸ்லியின் சகோதரி எமிலியா இந்தியாவில் டேனிஷ் மிஷனரிகளின் பணிகள் குறித்த வரலாற்றை தனது தாயாரிடம் படித்துக்காட்டினார். சுசன்னா, டேனிஷ் மிஷனரிகளின் பணிகளால் மிகவும் ஈர்க்கப்பட்டார். ஒவ்வொரு நாள் மாலையும் இப்பேற்பட்ட மிஷனரிமார்கள் தனது உயிரையும் பொருட்படுத்தாது கடவுளின் பணியை பாரத்துடன் கடல்கடந்து எடுத்துசென்றவர்களை குறித்து தன்பிள்ளைகளுக்கு போதிப்பார். தன்னுடைய பிள்ளைகளும் அப்பேற்பட்ட ஊழியர்களாக, மிஷனரிகளாக மாறவேண்டும் என்று அதிக வாஞ்சையுற்றார். தனது பெற்றோரின் கனவை ஜான் வெஸ்லி நிறைவேற்றி இறையியலை படித்து 1728ஆம் ஆண்டு ஆங்கிலிகன் திருச்சபை குருவானவராக பொறுப்பேற்றார்.

1735 இன் பிற்பகுதியில், இங்கிலாந்திலிருந்து ஒரு கப்பல் அமெரிக்காவிலுள்ள ஜோர்ஜியாவிற்கு சென்றது. அக்கப்பலில் இளம் ஆங்கிலிகன் போதகராக ஜான் வெஸ்லி நியமிக்கப்பட்டிருந்தார். அவர் ஜோர்ஜியாவிலுள்ள சவன்னா என்ற பிரிட்டிஷ் காலனி மக்களுக்கு போதகராக பணியாற்ற அழைக்கப்பட்டிருந்தார். கப்பல் பயணத்தின்போது வானிலை மிகவும் மோசமடைந்து கடுமையான புயலில் கப்பல் சிக்கியது. கப்பலில் இருந்தவர்கள் தங்களின் உயிருக்காக கலங்கி ஓலமிட்டுக்கொண்டிருந்தனர் கப்பலின் சேப்ளினான ஜான் வெஸ்லியும் தனது உயிருக்கு அஞ்சினார். ஆனால் அதே கப்பலில் அமெரிக்க இந்தியர்களிடம் பணியாற்ற பயணித்துக் கொண்டிருந்த ஜேர்மன்மொராவியர்களின்குழுசிறிதும்பயப்படவில்லைஎன்பதை அவர் நன்கு கவனித்தார். உண்மையில், அப்புயல் தாக்கிய நேரம் முதல் அவர்கள் அமைதியாக பாடலைகளை பாடினர். புயல் ஓய்ந்து கப்பல் கரையை சேர்ந்தபின், ஜான் வெஸ்லி மொராவியர்களின் தலைவரிடம் புயல் தாக்கிய நேரத்தில் மொரோவியர்கள் அமைதியாக எந்தவித பயமுமின்றி இருந்ததிற்கான காரணத்தை பற்றி வினவினார். மொராவியன் தலைவரோ ஒரு கேள்வியுடன் பதிலளித்தார் வெஸ்லி, நீங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறீர்களா ? வெஸ்லி ஆம் என்று சொன்னார். ஆனால் பின்னர் , 'அவை வீண் சொற்கள் என்று நான் அஞ்சுகிறேன்.' என தன்னுடைய நிலையை எண்ணி அவ்விசுவாசத்திற்கான தேடலை ஆழப்படுத்தினார்.


ஜான் வெஸ்லி மொராவியன் குழுவை சார்ந்த பீட்டர் புஹ்லர் வாயிலாக விசுவாசம் தான் மிகவும் ஒவ்வொரு மனிதனுக்கு மிகமிக தேவையானது என கற்றறிந்தார். மேலும் அவர் கலாத்தியர்களுக்கு பவுல் எழுதிய கடிதம் குறித்த மார்ட்டின் லூத்தரின் வர்ணனையை படித்தின் வாயிலாக விசுவாசத்தின் மூலமாக மட்டுமே கிருபையை பெற்றுக்கொள்ள முடியும் என்ற கோட்பாட்டை படித்தறிந்தார். மே 24, 1738 அன்று, லண்டனின் ஆல்டர்ஸ்கேட் தெருவில், மொரோவியர்களால் ஏற்படுத்தப்பட்ட சிறுகூடுகையில், மார்ட்டின் லூத்தர் ரோமாருக்கு பவுல் அடிகள் எழுதிய கடிதம் குறித்த மார்ட்டின் லூத்தரின் வர்ணனையை வாசிக்கப்பட்டது. வெஸ்லி அவ்வசனத்தினால் தொடப்பட்டார் தன்னுடைய விசுவாசத்தை அன்றைய தினத்தில் உறுதிப்படுத்தினார். அத்தினம் வெஸ்லியின் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைத்தது.

இவ்வாறாக இங்கிலாந்தில் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு ஜான் வெஸ்லி வழிவகுத்தார். இங்கிலாந்தில் வெஸ்லியின் பெயர் சிறந்துவிளங்கிய தருணத்தில் இம்மறுமலர்ச்சியை அமெரிக்காவிற்கு கொண்டு செல்ல டாக்டர்.கோக் என்ற தனது நண்பரை பொறுப்பாளராக நியமித்தார் அவருக்கு கீழே இறைபணியாற்ற இரண்டு ஊழியர்களை நியமித்தார். டாக்டர். கோக் 1787ஆம் ஆண்டு முதல் ஒன்பது முறை அமெரிக்காவிற்கு மிஷனரி பயணம் மேற்கொண்டு அங்கு மெத்தடிஸ்ட் திருச்சபையின் வளர்ச்சிக்கு வலுவான அடித்தளமிட்டார்.

தொடரும் ..

# மறைந்து போன கிறிஸ்தவ பங்கு

பிலிப் கே . மல்லி மோரினாள் ஆயர் ,
தென்னிந்திய திருச்சபை கோத்தகிரி - நீலகிரி



'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற அரசியல் பூச்சுக்கலந்த பரப்புரையை நாம் அனைவரும் அறிவோம். ஆனால், இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே அறிவியல் நெறிமுறைகளையும் தமிழில் தரமுடியும் என்று சாதித்து காட்டினவர்களைக் குறித்ததே இந்த எழுத்தாகும் . அத்தகைய பங்கீடுகளை மறந்து போகாமல் பதிவு செய்வதே இதன் நோக்கம்.

இந்த அறிவியல் அணுகுமுறையை இலக்கியம் வாயிலாக அளித்த முன்னோடி தஞ்சை வேதநாயக சாஸ்த்திரியார். ( 1774-1864 ) அவர்கள் என்பது எத்துணை பேருக்குத் தெரியும் ?

1. கிறிஸ்துவப் பணியில் சாஸ்திரியார் அவர்களுக்கு முன்னோடிக்கான சீகன்பால்கு போன்றோர் அநேக இந்து புராண மரபுகளையும், அவைகள் உருவாக்கி வைத்திருந்த புவியியல் புனைவுகளையும் உலகத்தோர் கவனத்திற்குக் கொண்டு வந்தனர் . ஆனால் வேதநாயக சாஸ்திரியார் மட்டுமே இப்புனைவுகளைத் தவிர்த்து, அவை மூலமாக பரவியிருந்த படைப்பியலை ( cosmology ) ஒரு புதிய அறிவியல் சவாலுடன் அணுகினார் என்பது மிகையன்று. இன்றளவும் தொலைக்காட்சி ஊடகங்களின் வாயிலாக நாம் சந்தித்துக் கொண்டுள்ள: 'கிராபிக்ஸ் மற்றும் சீரியல்' களை நோக்குகையில் சாஸ்திரியார் அவர்களின் அணுகுமுறைக்கு ஈடானது வேறோன்றுமில்லை என்று அறுதியிடல் இயலும். சாஸ்திரியார் அவர்கள் - 1800 - ஆம் ஆண்டில் இயற்றிய 'பெத்லகேம் குறவஞ்சியும்'. 1830- ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 'ஞானத்தச்சன்' என்ற அவர் தம் படைப்பும் தரும் அறிவியல், புவியியல் , வானியல், உயிரியல், உடலியல் புலங்களின் அடிப்படைக் கொள்கைகள் நம்மை வியப்பில் ஆழ்த்து பவையாம். மனித உடம்பில் 249 எலும்புகள் உள்ளன என்பது முதற்கொண்டு அண்ட வெளியில் தொங்கும் கோள்களை பந்துகளாக உருவகம் செய்து சொல்லப்படும் அறிவியல் தகவல்கள், தமிழுலகம் அதுவரை அறிந்திராத இயற்பியல் உண்மைகளாகும். அவைகளுக்கு முதன்முதலாக எழுத்துருவம் கொடுத்த மூதறிஞர் சாஸ்திரியார் அவர்கள் மட்டுமே இந்த பகுத்தறிவுப் புரட்சிக்கு வித்திட்டவர் சாஸ்திரியார் என்பது, தமிழ்க் கிறிஸ்தவ உலகம் பெருமிதம் கொள்ள வேண்டிய சிறப்பாகும். அவ்வறிவியற் சான்றுகளை, நயமிகும் உருவாக்கங்களாகத் தமிழ் இலக்கியத்தில் நிறுவியவர் சாஸ்திரியார் அவர்கள் மட்டுமே.

சாஸ்திரியார் அவர்களுக்குப் பின்னர், தமிழ் அறிவியற்புலத்தில் முத்திரை பதித்தவர். திருநெல்வேலி சி.எம்.எஸ் சபைகளின் இணைப் பேராயராகப் பணியாற்றிய எட்வர்டு சார்ஜென்ட் (அருட்பொழிவு 1877 ) அவர்கள் ஆவார். திராவிட மொழியியலின் ஞானத்தந்தை ராபர்ட் கால்டுவெல்லும், இவரும் சமக்காலத்தவர் என்பதையும், கால்டுவெல் எஸ் . பி . ஜி சபைகளின் இணைப் பேராயராக இருந்தவர் என்பதையும் நாம் அறிவோம். எட்வர்டு சார்ஜென்ட் அவர்கள் மிஷனெரியாகப் பணியாற்றிய ஆண்டுகளில் , இயற்றின வெளியிட்ட இரண்டு முக்கியமான நூல்கள் தத்துவ சாஸ்த்திரம், தத்துவ சாஸ்திர வினா - விடை - என்பனவாம். தமிழில் தத்துவ மற்றும் அறிவியற் கோட்பாடுகளை இந்நூல்கள் தந்தது மட்டுமல்லாமல், இப்புலங்களின் கலைச் சொல்லாக்கத்துறைகளிலும் , இவ்விரண்டு வெளியீடுகளின் பங்கு முதன்மையானதாக இருந்தது.

சார்ஜென்ட் அவர்களைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் அமெரிக்க மிஷன் தளத்தில் பணியாற்றிய ஆயர் சாமுவேல் கிரீன் அவர்கள், தமிழ் மருத்துவ- அறிவியல் துறைக்கு ஒரு புதிய மெருகை ஊட்டினார். கிறிஸ்துவ சுவிஷேசம் எப்படி தமிழ் மொழியில் சொல்லப்பட முடியுமோ. அவ்வாறாகவே மருத்துவக் கல்வியும் தமிழ் மொழி மூலம் புகட்டப்பட வேண்டும் என்பதில், அவர் தணியா வேட்கை கொண்டிருந்தார். 1860 களில், மருத்துவக் கல்விக்கான பாட நூல்களை கிரீன் அவர்கள் தமிழில் இயற்றியிருந்தார். அத்தோடு ஜோதி சாஸ்திரம்' என்ற தமிழ்ப் வானியல் வெளியீடு மற்றும் 'உதய தாரகை' என்ற பொது வெளியீடு வாயிலாகவும் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய அமெரிக்க மிஷன், அறிவியல் துறையிலும் தமிழால் முடியும் என்று சாதித்துக் காட்டியிருந்தனர்.

மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள முன்னோடியான தமிழ்க் கிறிஸ்தவ முயற்சிகளைக் குறித்து விரிவான ஆய்வுகள் இன்றியமையாதன என்பதில் ஐயமில்லை. மறக்கக் கூடாத மறைக்கப்பட இயலாத இக்கிறிஸ்தவப் பங்கீட்டினைத் தமிழ் இலக்கிய உலகு ஒரு புதிய பொலிவோடு வெளிக் கொணருதல் அவசியம்.

# வடநெல்லை ஆன்மீக சீர்திருத்தம்

## 1860 முதல் 1900 வரை

அருள்திரு . ராஜா
சாட்சியாபுரம்

வடநெல்லை மாவட்டம் 1860 முதல் 1877வரை மிகப் பெரிய மாற்றத்தையும், மக்களிடையே மிகப்பெரிய ஆன்மீக வளர்ச்சியையும் கண்டது. ஆனால் அதற்கு முன்பு வடநெல்லை மக்கள் விக்கிரக ஆராதனை முறையில் தெய்வங்களை வணங்கி கொண்டு வந்தார்கள். சமுதாயத்தில் பொருளாதாரம், சமயச் சூழ்நிலைகள் கொண்ட மாபெரும் எல்லையைக் கொண்ட நிலப்பரப்பாக காணப்பட்டது.

சுமார் 1500 பெரிய, சிறிய மற்றும் குக்கிராமங்கள் நிறைந்த மாவட்டம் தான் வடநெல்லை மாவட்டம், இந்த வடநெல்லை மாவட்டம் தூத்துக்குடி, மதுரை, கோவில்பட்டி, கேரளா எல்லையை தொட்டு காணப்பட்ட பகுதியாகும். அன்றைய நாட்களில் விவசாயம், பருத்தி, சோளம், கேப்பை, கம்பு, நெல், மிளகாய் போன்றவை பயிற் செய்து மக்கள் வாழ்ந்து வந்தார்கள்.


வட திருநெல்வேலியில் உயர், நடுத்தர, தாழ்ந்த குடிமக்கள் பல பிரிவினர்கள் வாழ்ந்து வந்தார்கள். குறிப்பாக பல நிலங்கள் உயர் குலம் என்று சொல்லப்படும் பிராமணர்களிடமே அதிகமாக கைவசம் இருந்தது. இவர்கள் மட்டுமே கல்வி அறிவு பெற்றவர்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி, பொது, இடங்களில் பேச்சுரிமை, நடப்பது, குடை பிடிப்பது, செருப்பு அணிவது போன்ற செயல்பாடுகள் தடை செய்யப்பட்டது. பொது கிணற்றில் தண்ணீர் கூட எடுக்க தடை செய்யப்பட்டது. வடநெல்லை பகுதியை பாண்டிய மன்னர்களும், நாயக்க மன்னர்களும், பாளையக்காரர்களும், பிரித்தானியர்களும் அடுத்து அடுத்து ஆட்சி செய்து வந்தார்கள். குறிப்பாக பிராமணர்களுக்கு அடுத்தபடியாக ஜமீன்தார்கள் கிராமங்களில் முழுமையான நிலங்களை தன் கைவசமாக வைத்திருந்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் மத்தியில் 1854ஆம் ஆண்டு வடநெல்லை அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்படும் அருள்திரு. T.G.இராக்லாந்து, அருள்திரு.ஆர்.ஆர்.மெடோஸ் மற்றும் அருள்திரு. J.டேவிட்பெட்டன் இவர்கள் மூன்று பேரும் வடநெல்லை பகுதியில் சுற்றிதிரிந்து நற்செய்திப் பணிகளை 1858 வரை நிறைவேற்றினார்கள். இவர்கள் மூவருக்கும் மற்ற அடமொழிகள் உண்டு(வடநெல்லை மூவர், வடநெல்லை மும்மூர்த்தி, திருவாரூர் மூவர்) 1858 அக்டோபர் 22ம் தேதி அருள்திரு.இராக்லாந்து அவர்கள் கோதுமை மணியாக மண்ணில் மரித்தார். இதே ஆண்டில் அருள்திரு.ஆர்.ஆர்.மெடோஸ் அவர்கள் இங்கிலாந்து நாட்டிற்கு சென்று விட்டார். வடநெல்லை ஊழியத்தை அருள்திரு.வில்லியம் கிரே அவர்கள் கண்காணித்தார். மீண்டும் அருள்திரு.ஆர்.ஆர்.மெடோஸ் அவர்கள் வடநெல்லைக்கு 1860ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வந்து இறங்கினார். தொய்ந்து போன வடநெல்லை ஊழியம் அருள்திரு.ஆர்.ஆர். மெடோஸ் அவர்களால் மிகப்பெரிய மறுமலர்ச்சியடைந்தது. இதற்கு முக்கிய காரணமானவர் அருள்திரு.ஆர்.ஆர்.மெடோஸ் அவர்கள் என்று சொன்னால் மிகையாகாது.

**அருள்திரு.ராபர்ட் ரஸ்ட் மெடோஸ் ஐயர் அவர்களின் மீண்டும் வருகை : 1860 - 1877**

மீண்டும் மெடோஸ் அவர்கள் வடநெல்லைக்கு 1860ல் வந்தார். கடவுள் கொடுத்த வடநெல்லை ஊழியத்தை தன் கையில் எடுத்து எங்கும் சுற்றிதிரிந்து நற்செய்தி பணியை செய்தார். அவருடைய வருகை வடநெல்லையில் மிகப்பபெரிய ஆன்மீக மறுமலர்ச்சி ஏற்ப்பட்டது. அவரைப்பற்றியும், அவருடைய ஆன்மீக மறுமலர்ச்சியைப்பற்றியும் காண்போம்.

வடநெல்லைக்கு வித்தாகவும், சிவகாசியின் முத்தாகவும், சாட்சியாபுரத்தின் சொத்தாகவும் வந்த ராபர்ட் ரஸ்ட் மெடோஸ் ஐயர் அவர்கள் 10.02.1829 ஆம் ஆண்டு இங்கிலாந்து தேசத்தில் உள்ள விட்னஸ்கேம்ப் என்ற இடத்தில் பிறந்தார். சிறு வயதில் படிப்பிலும், கடவுள் நம்பிக்கையிலும் அதிக நாட்டம் கொண்டவராக திகழ்ந்தார். பள்ளியில் கல்வியை முடித்ததும் பட்டப்படிப்புக்காக கேம்பிரிட்ஜ் நகரில் உள்ள கார்பஸ் கிறிஸ்டி கல்லூரியில் யபு பட்டம் பெற்றார். 1852ஆம் ஆண்டு லண்டனில் மக்கனாக அருட்பொழிவு பெற்று CMS மிஷனரியாக சென்னைக்கு வந்து சேர்ந்தார். 1854ஆம் ஆண்டு சென்னையில் ஆயராக அருட்பொழிவு பெற்று மிஷனரி பணியை இராகலாந்து ஐயருடனும், டேவிட் பென்னுடனும் ஊழியத்தை நிறைவேற்ற 1854ல் வடநெல்லைக்கு புறப்பட்டார். மூவரும் இணைந்து நற்செய்தியை பரப்பினார்கள். கல்லெறி வாங்குதல், அவமானங்கள், பசி, பட்டினி, சுகவீனம், நோய், என்று பால பாடுகள் மத்தியில் நற்செய்தி பணிகளை எங்கும் சுற்றி திரிந்து ஊழியம் செய்தார்கள். கிராம மக்களுடன் உரையாடி ஊழியம் செய்வதில் மூன்று பேரும் நல்ல இறைப்பணிகளை செய்தார்கள். இராகலாந்து நற்செய்தி கூறும் போது அதை தமிழ் மொழியில் மொழி பெயர்த்து கூறுவதில் மெடோஸ் அவர்களுக்கு கைவந்த கலையாகயிருந்தது. செய்தி கொடுப்பதிலும் மெடோஸ் ஐயர் சரலமாக தமிழ் பேசினார்.

இன்று அதிகமாக பேசப்படும் அருள்திரு.இராக்லாந்து ஐயர் அவர்களுடன் இணைந்து 1854 முதல் 1858வரை ஊழியத்தை அருள்திரு.ஆர்.ஆர்.மெடோஸ் ஐயர் அவர்கள் நற்செய்திப்பணியை செய்துள்ளார். இராக்லாந்து ஐயர் 43வயதில் 1858ல் காலமானார். அதே ஆண்டில் மெடோஸ் ஐயர் அவர்கள் இங்கிலாந்து நாட்டிற்கு



அருள்திரு.ராபர்ட் ரஸ்ட் மெடோஸ் ஐயர்

சென்றார். 1858 முதல் 1860 வரை இரண்டு ஆண்டுகளில் சிவகாசி பகுதி ஊழிய பணிகளை அருள்திரு.நி.கிரே அவர்கள் பொறுப்புடன் கவனித்துக்கொண்டார். (குறிப்பு: இந்த ஆண்டில்தான் மெடோஸின் ஆலோசனைப்படி வருடாந்திரக் கூட்டம் முதன் முதலில் 1860ம் ஆண்டு திருத்தங்கல்லில் நடைபெற்றது. அவருடை மூன்று கொள்கை இக்கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேறப்பட்டது. அந்த தீர்மானங்கள் இன்று வரை கடைப்பிடிக்கப்படுகிறது. அதை தொடர்ந்து சாட்சியாபுரத்தில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்றது. பின் நாட்களில் இந்த வருடாந்திரக் கூட்டம் சாட்சியாபுரத்தில் 1891 ம் ஆண்டு முதன் முதலில் தவச உற்சவ பண்டிகையாக கொண்டாடப்பட்டது. இப்பண்டிகையை சாட்சியாபுரம் ஆலயத்தின் குருவானவர் சாமுவேல் பவுல் ஐயர் அவர்கள் சாட்சியாபுரம் ஆலயத்தில் தொடங்கினார்). மெடோஸ் அவர்கள் சிவகாசி வந்ததும் W.கிரே அவர்கள் சென்னைக்கு மாற்றம் பெற்றார்.

1860 ம் ஆண்டு மெடோஸ் ஐயர் அவர்கள் சிவகாசி பட்டணத்திலிருந்து சுமார் 3கிலோ.மீதூரத்தில் தன்னுடைய சொந்த ஊரான விட்னஸ்கேம்ப் நினைவாக சாட்சியாபுரம் என்ற தமிழாக்கம் செய்து நிலங்களை வாங்கி சிறிய கிராமத்தை உருவாக்கினார். இந்த பகுதியில் 1861ம் ஆண்டு முதல் தங்கி ஆலயத்தை கட்டி பல கிராமங்களில் சென்று நற்செய்தி அறிவித்தார். வடநெல்லை பகுதி முழுவதும் மேற்பார்வை செய்யும் பணியிலும் ஈடுபட்டார். 1861ம் ஆண்டு மெடோஸ் ஐயர் அவர்கள் தங்குவதற்கு ஒரு பங்களாவும், ஆண், பெண் மாணவர்களுக்கான தனித்தனியாகப் போர்டிங் பாடசாலைகளும், ஒரு புதிய ஆலயத்தையும் 1861ல் கட்டி முடித்தார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கடவுளை ஆராதிப்பதற்க்காகவும், ஆராதனையில் கலந்து கொள்ளவும் இந்த ஆலயம் கட்டப்பட்டது. நற்செய்தி பணியின் மூலமாக அநேக மக்களை ஆலயத்தில் சேர்த்துக்கொள்ளவும், இந்த ஆலயம் கட்டப்பட்டு வளர்ச்சியடைந்தது. ஆலயத்தின் மேற்பகுதி கூரைப்புல்லால் வேயப்பட்டு 600ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. வடநெல்லை பகுதிக்கே இந்த இடம் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது. 1870 ஆம் ஆண்டு முதல் தென்திருநெல்வேலி திருச்சபை நிர்வாக அமைப்பைப் போன்று சிவகாசி மாவட்டம், சிவகாசி திருச்சபைக் கவுன்சிலாக மாற்றப்பட்டது. சிவகாசியின் முதல் கவுன்சில் சேர்மன் மெடோஸ் அவர்கள் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார். ஆண், பெண்களுக்கான போர்டிங் பாடசாலைக் கட்டிடங்களின் மேற்பகுதி கூரைப்புல்லால் வேயப்பட்டது. 1871ம் ஆண்டு இந்தக் கட்டிடங்களும், ஆலயமும் நாழி ஒடுகளினால் மேல் கூரை கட்டப்பட்டது. அகலமான பாதைக்கான இடைவெளி விட்டு, இரண்டு வரிசையில் வீடுகள் கட்டப்பட்டது.

இந்த ஆண்டில் மெடோஸ் அவர்கள் இங்கிலாந்துக்கு சென்றார். மீண்டும் 1873 ஆம் ஆண்டு சாட்சியாபுரம் வந்து மருத்துவமனை கட்டி மருத்துவ பணிகளை செய்தார். அதன்பின்பு 1877 ஆம் ஆண்டு உடல் நிலை சரியில்லாத காரணத்தினாலும், வயது முதிர்வினாலும் இங்கிலாந்து நாட்டிற்கு சென்றார். அவர் இங்கிலாந்தில் மரித்தாலும், அவருடைய உயிர் இன்றும் சாட்சியாபுரத்தில் வாழுகின்றது. 1852 ஆண்டு முதல் 1877 ஆண்டுகள் வரை சுமார் 25 ஆண்டுகளில் அவர் வடநெல்லை பகுதிகளில் நற்செய்தி பணிகள், அநேக ஆலய கட்டும்பணிகள், கல்வி பணிகள், விடுதிகள், மருத்துவ பணிகள், குருத்துவ பணிகள், சேவை பணிகள் மூலமாக சமூகத்தை உயர செய்தவர் என்று சொன்னால் மிகையாகாது.

1860 முதல் 1877 வரை ஆன்மீக மறுமலர்ச்சி பணிகள் வளர்ந்தது என்றால் அது மெடோஸ் ஐயர் அவர்கள்தான். மெடோஸ் ஐயரை இந்த சமூகம் மறந்திருக்கலாம், ஆனால் சாட்சியாபுரத்தை யாராலும் மறக்க முடியாது, மறுக்கவும் முடியாது, இன்றும் மதுரை-இராமநாதபுரம் திருமண்டிலத்திற்க்கும், திருநெல்வேலி திருமண்டிலத்திற்கும், தூத்துக்குடி-நாசரேத் திருமண்டிலத்திற்க்கும் மையமாக ஊழிய பணியில் ஒரு ஆணி வேராகவும் இருப்பது சாட்சியாபுரம் குருசேகரம் சாட்சியாக நின்றுக்கொண்டிருக்கின்றது. (வடநெல்லை பகுதி இந்த மூன்று CSI.திருமண்டிலத்தின் எல்லை பகுதிக்குள் அடங்கும்) அதற்கு காரணம் மெடோஸ் ஐயர் அவர்கள். அவர் ஊழிய பணிகளை நிறைவேற்றி இங்கிலாந்தில் மரித்தார். அவர் இங்கிலாந்தில் மரித்தாலும் அவருடைய ஊழிய ஆன்மீக மறுமலர்ச்சி பணிகள் இன்றும் சாட்சியாக சாட்சியாபுரத்தில் தொடர்ந்து வளர்ந்து உயிருடன் சாட்சியாபுரம் வட்டகை இரண்டு மன்றங்களில் (மேற்கு மற்றும் கிழக்கு) 18 குருசேகரமாக வளர்ந்து அநேக கிராம திருச்சபைகளுடன் நிலைத்து தூணாகயிருக்கிறது. அதற்கு காரணம் அருள்திரு.ஆர்.ஆர்.மெடோஸ் ஐயர் அவர்களின் சீர்த்திருத்த பணிகள். சுமார் 25 ஆண்டுகள் வடநெல்லையில் ஊழியப்பணி செய்து பல முன்னேற்றங்களையும், ஆன்மீக மறுமலர்ச்சி சீர்த்திருத்தங்களை கொண்டு வந்த அருள்திரு.ஆர்.ஆர்.மெடோஸ் ஐயர் அவர்களை இந்த சமூகம் மறந்து விட்டது. ஆகவே 'மறக்கப்பட்ட மாமனிதர்' என்ற புத்தகத்தின் வாயிலாக அருள்திரு.ஆர்.ஆர்.மெடோஸ் ஐயரைப்பற்றி விரிவாக பார்க்கலாம்.

வடநெல்லை கிறிஸ்தவ மக்களிடத்திலும், பொது மக்களிடத்திலும் ஆன்மீக மறுமலர்ச்சி சீர்த்திருத்தத்தையும், ஆன்மீக புத்தெழுச்சி சீர்த்திருத்தத்தையும் கொடுத்தவர்கள் இவர்கள் இரண்டு இறைப்பணியாளர்கள் என்று சொன்னால் மிகையாகாது. இவர்களுடைய உழைப்பு இன்று சாட்சியாபுரம் மட்டுமல்ல மூன்று திருமண்டிலங்களுக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கின்றது. இவர்களைப்போல் சாட்சியாக இறைப்பணியும், நற்செய்தி பணியும், சமூக பணியும், இன்னும் பல பணிகள் இறையரசு நிலைக்க தொடரட்டும் ........




# திருச்சபையில் சீர்திருத்தங்கள் காரணங்களும் விளைவுகளும்

## ஓர் வரலாற்றுப் பார்வை

J. ஜான் ஞானராஜ்
கல்லிடைகுறிச்சி

தொடக்ககால திருச்சபை முதல் இன்றைய திருச்சபை வரை கிறிஸ்தவத்தில் சீர்திருத்தங்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது அதற்கான காரணங்களையும் சீர்திருத்தங்களால் ஏற்பட்ட விளைவுகளையும் வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு பார்ப்போம்.

**சபையில் சீர்திருத்தம் ஏற்படக் காரணங்கள்**

எருசலேமில் யாக்கோபு தலைமையில் யூத சமய சடங்குகளை யூதர் அல்லாத கிறிஸ்தவர்கள் செய்ய வேண்டுமா? வேண்டாமா? என்பதற்காக சபையின் திருச்சங்கம் கூட்டப்பட்டது, செய்யவேண்டாம் என அதில் முடிவெடுக்கப்பட்டது அதன் பின்பு நடத்தப்பட்ட முதல் ஏழு உலகளாவிய திருச்சபை பொதுமாமன்றங்களில்/திருச்சங்கங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சபை சீர்திருத்தத்தில் முக்கிய பங்கு வகித்தன அவையாவன

**நிசேயா திருச்சங்கம்**

கி.பி.325 இல் ‘குமாரன் கடவுளின் மகன் என அழைக்கப்பட்டாலும் அவர் உண்மையான கடவுள் அல்லர்‘ என கூறிய ஆரியு கொள்கையை முறியடிக்கவும், திரித்துவக் கொள்கையை நிலைநாட்டவும் இச்சங்கம் கூட்டப்பட்டது, 318 பேர் பங்கேற்றனர், 20 Canon சட்டம் நிறைவேறியது. நிசேயா விசுவாச பிரமாணம் ஏற்படுத்தப்பட்டது.

**கான்ஸ்டாண்டிநோபிள் திருச்சங்கம்**

கி.பி.381 இல் பரிசுத்த ஆவியானவர் தந்தையாகிய கடவுளோடு ஒத்த தன்மையுள்ளவரல்ல எனக்கூறிய மாசிடோனிய கொள்கையையும், அப்பொலிநாரியஸ் கொள்கையையும், மீண்டும் எழும்பிய ஆரியு கொள்கையையும் முறியடிக்க இச்சங்கம் கூட்டப்பட்டது, 150 பேர் பங்கேற்றனர், இதில் நிசேயா விசுவாச பிரமாணம் உறுதிப்படுத்தப்பட்டது. ஏழு கனோன் சட்டம் நிறைவேறியது.


**எபேசு திருச்சங்கம்**

கி. பி.431இல் இயேசு கிறிஸ்து இறைத் தன்மையோடு பிறக்கவில்லை எனக்கூறிய நெஸ்டோரிய கொள்கையை முறியடிக்க இச்சங்கம் கூட்டப்பட்டது, இதில் 250 பேர் பங்கு பெற்றனர், 8 கனோன் சட்டம் நிறைவேறியது. தூய மரியன்னை கடவுளின் தாய் என்பது ஏற்கப்பட்டது

கால்சிதோன் திருச்சங்கம் கி.பி.451இல் ‘கிறிஸ்துவில் இறைத் தன்மையும் மனிதத் தன்மையும் கலந்து குழம்பி உள்ளது‘ எனக் கூறிய யூத்திகு கொள்கையை முறியடிக்க இச்சங்கம் கூட்டப்பட்டது, 520 பேர் பங்கு பெற்றனர் 28 கனோன் சட்டம் நிறைவேறியது. இச்சங்கத்தில் நிசேயா விசுவாச பிரமாணம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

கான்ஸ்டாண்டிநோபிள் திருச்சங்கம் கி.பி.553 இல் நெஸ்டோரிய கொள்கையை முறியடிக்க இச்சங்கம் கூட்டப்பட்டது.152 பேர் பங்கு பெற்றனர். 29 (14+15) கனோன் சட்டம் நிறைவேறியது.

கான்ஸ்டாண்டிநோபிள் திருச்சங்கம் கி.பி.680 - 681 இல் மோனோதெலிட்டிஸம் கொள்கையை முறியடிக்க இச்சங்கம்



கூட்டப்பட்டது, 300 பேர் பங்கேற்றனர்.

**நிசேயா திருச்சங்கம்**

கி. பி.787 இல் இயேசு கிறிஸ்துவின் தன்மை குறித்த சர்ச்சையை முறியடிக்க இச்சங்கம் கூட்டப்பட்டது. 'இயேசு கிறிஸ்து இறைத் தன்மையும் மனிதத் தன்மையும் கொண்ட ஒரே ஆள்தத்துவம் உள்ளவர்' என்பது அறிக்கையிடப்பட்டது. 350 பேராயர்களும், இரண்டு போப்பாண்டவர் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றனர். மேற்கண்ட ஏழு மாமன்றங்கள் / திரு சங்கங்களைத் தவிர்த்து கீழ்க்கண்ட சபை மன்றங்களின் முடிவுகளும் திருச்சபைக்குள் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தது. ட்ருல்லன் (கி.பி.692 இல் சபை வட்டாரங்கள் அரசு வட்டாரங்களுக்கு ஒத்ததாக அமைக்கப்பட இச்சங்கம் கூட்டப்பட்டது) இராடிஸ்பான் (கி.பி.792), ஃபிராங்க்ஃபர்ட்(கி.பி.794), கி.பி1074 இல் நடந்த திருச்சபை மாமன்றம், கான்ஸ்டன்ஸ் (கி.பி.1414), வொர்ம்ஸ் (கி.பி.1521), ஸ்பெயர்ஸ் (கி.பி.1529) ஆக்ஸ்பர்க் (கி.பி.1530,1555), நியூயார்க் (1900), எடின்பரோ(1910) ஆம்ஸ்டர்டாம் (1948) ஆகிய திருச்சபை மாமன்றங்கள்,

✷ தூய.மரியன்னை அவர்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் (யோவானின் நேரடி சீடராக இக்னேஷியசும் இக்னேஷியசின் நேரடி சீடராக போலிகார்ப்பும் போலிகார்ப்பின் நேரடி சீடராக ஐரேனியசும் இருந்தனர், ஐரேனியஸ் கி.பி 185 இல் ஏவாளின் தவறுதலுக்கு பதிலாக தூய மரியன்னையின் கீழ்ப்படிதலை ஒப்பிட்டார் இது முதல் தூய மரியன்னை திருச்சபையில் முக்கியத்துவம் பெற்றார்.

✷ கி.பி.401 முதல் தூய மரியன்னை மூலமாய் ஆண்டவரை நோக்கி இறை வழிபாடு செய்யும் முறை தொடங்கலாயிற்று), புனிதர்கள் மூலமாய் ஆண்டவரை நோக்கி இறை வழிபாடு செய்யும் முறை கி.பி.450 முதலாய் தொடங்கலாயிற்று.

✷ வேதாகமத்திற்கு புறம்பான பாவமன்னிப்பு சீட்டு முறை, உத்தரிக்கும் ஸ்தலம் சபையில் இடம்பெற்றது.

✷ கிறிஸ்தவ பண்டிகைகள் (கிறிஸ்மஸ், ஈஸ்டர்) கொண்டாடும் நாட்களைத் தெரிவு செய்யும் முறையில் மேற்கத்திய கிழக்கத்திய சபைகளுக்கு இடையே ஏற்பட்ட குழப்பம்.

✷ கிறிஸ்தவத்தின் அடிப்படை சித்தாந்த கொள்கை (திரித்துவம் உட்பட) குறித்த கருத்து வேறுபாடுகள், ரோம, கிரேக்க பண்பாடுகள் திருச்சபைக்குள் புகுந்தமை, சடங்காச்சாரங்கள் என்ற போர்வையில் புகுந்த பிற மத கொள்கைகள்

**மேற்கத்திய திருச்சபை, கிழக்கத்திய திருச்சபை என தலைமைத்துவத்தை மையமாக கொண்டு ஏற்பட்ட பிளவுகள்**

✷ தேவாலய வழிபாட்டு முறைகளில், சபை சட்டதிட்டங்களில் கொண்டுவரப்பட்ட பல மாற்றங்கள்.

✷ சாக்கிரமந்து எனும் திருவருட்சாதனங்களை ஏற்றுக் கொள்கிற முறை யில் ( 7 அல்லது 2) மாறுபாடு.

✷ திருமுழுக்கு மற்றும் திருவிருந்து கொடுக்கும் முறைகளில் முரண்பாடு.

✷ ஓய்வு நாள் ஆசரிப்பு முறை, சிலை/உருவ வணக்க வழிபாடு, சிலுவை வழிபாடு முறை,

✷ குருக்கள் திருமணம் செய்தல்/துறவறக் குருக்கள் முறை, குருக்கள் அங்கி அணியும் முறையில் ஏற்பட்ட வேறுபாடுகள்.

✷ தேவாலய வழிபாட்டு முறை, வழிபாட்டில் தாய்மொழி இடம் பெறுதல் குறித்த மாறுபட்ட கருத்துக்கள்.

✷ தேவாலய அமைப்பு முறை, ஆல்டர் அமைப்புமுறை, ஆல்டர் திருமேசை அமைப்பு முறைகளில் வேறுபாடு

✷ அமெரிக்க ஐக்கிய நாட்டில் டோபேகா நகரில் 1900ஆம் ஆண்டு முதல் போதகர்.சார்லஸ்.F.பர்ஹாம் போதித்த பெந்தேகோஸ்தே சத்தியங்களும் அவரால் 1901 இல் தொடங்கப்பட்ட முதல் பெந்தேகோஸ்தே சபையும், 09.04.1906 இல் அமெரிக்க ஐக்கிய நாட்டில் அசூசா தெரு சபையில் ஏற்பட்ட ஆவிக்குரிய எழுப்புதல் அக்கினி அனுபவமும் உலகமெங்கும் பெந்தேகோஸ்தே திருச்சபைகள் உருவாகக் காரணமாயிற்று.

**சபை சீர்திருத்தத்தினால் ஏற்பட்ட விளைவுகள்**

✷ ரோம் நகரை தலைமையிடமாகக் கொண்ட கத்தோலிக்க திருச்சபை எனும் பொதுவான சபையில் கி.பி.1054 இல் பிளவு ஏற்பட்டு போப் ஆளுகையை எதிர்த்து வைதிக பாரம்பரிய சபை எனும் ஆர்த்தொடாக்ஸ் திருச்சபை கான்ஸ்டாண்டிநோபிள் ஐ தலைமையிடமாகக் கொண்டு அதன் பேராயர் ஆன பேட்ரியார்ச் மைக்கேல் செருலாரியஸ் தலைமையில் உருவானது.

✷ சபைகள் தூய்மை பெற்றன,சபை சீர்திருத்தம் காரணமாக கத்தோலிக்க திருச்சபையும் புதிய எழுச்சியை பெற்றது அதில் இயேசு சங்கம்/இயேசு சபை என்றழைக்கப்பட்ட Society of Jesus (Jesuit) எனும் துறவற மிஷனரி இயக்கம் நிறுவப்பட்டது. உலகமெங்கும் நற்செய்தி அறிவிக்கும் அருட்பணியாளர்கள் அதன் மூலம் அனுப்பப்பட்டனர்.

✷ சபைகள் ஆவிக்குரிய எழுப்புதலைப் பெற்றன, சடங்காச்சாரங்கள் குறைந்தது, சுத்த சுவிசேஷம் எனும் சுத்தாங்க சுவிசேஷம் எழுச்சி பெற்றது.

✷ சபை சீர்திருத்தம் காரணமாக குருக்கள் திருமணம் செய்து கொண்டனர்.

✷ திருவிருந்தில் அப்பத்தோடு திராட்சரசம் பரிமாறப்பட்டது.

✷ பாவமன்னிப்பு சீட்டு முறை ஒழிந்தது, தேவாலயத்தில் சிலைகள் அகற்றப்பட்டன.

✷ தாய்மொழியில் வேதாகமம் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. தாய்மொழியில் வழிபாட்டு முறை/சடங்குகள் நடைபெற்றன.

✷ திருவிருந்து மற்றும் திருமுழுக்கு மட்டுமே திருவருட்சாதனம் எனும் நிலை சீர்திருத்த சபைகளில் ஏற்பட்டது.

✷ ஜெர்மனியில் 1517 இல் மார்ட்டின் லூதர் எனும் கத்தோலிக்க குரு தலைமையிலும் சுவிட்சர்லாந்தில் 1522 இல் உல்ரிச் ஸ்விங்கிலி தலைமையிலும் 1533 இல் ஜான் கால்வின் தலைமையிலும்,சீர்திருத்த சபைகள் உருவானது. இங்கிலாந்தில் பேரரசர் எட்டாம் ஹென்றியின் மறு திருமணத்திற்கு போப் ஏழாம் கிளமெண்ட் அனுமதி அளிக்காததால் 1533 இல் இங்கிலாந்து சபையின் தலைவராக பேரரசர் எட்டாம் ஹென்றி தம்மை அறிவித்தார் பின் அது ஆங்கிலிக்கன் சபை எனும் சீர்திருத்த சபையாக மாறினது. 1543 இல் ஸ்காட்லாந்து சபைகள் சீர்திருத்த சபைகள் ஆக மாறின.

# சேலத்துச் செம்மல் திரு.கே.டி.பால்

ஜே.பர்னபாஸ்,
சேலம்



தமிழகத்தில் ஈரோட்டை மையமாகக் கொண்டு நற்செய்திப் பணியும்,தமிழ் இலக்கியப் பணியும், கல்வி,மற்றும் சமுதாயப் பணியும்,சிறப்பாக செய்துவந்த சங்கை H.A.பாப்லி ஐயர் (Rev.H.A.Popley )சேலம் தந்த சுதந்திர போராட்ட வீரர் கே.டி.பால்.,அவர்களைப் பற்றி எழுதிய நூலுக்கு 'கிறிஸ்தவ தலைவர் கே.டி.பால் 'என்றே தலைப்பு கொடுத்தார் (K.T.Paul -Christian Leader).அதே தலைப்பில் அமைந்த இந்த எனது கட்டுரை இன்றைய சேலத்து மக்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த இந்திய கிறிஸ்தவ உலகமும் மறந்துபோன மாபெரும் தலைவரை மீண்டும் நினைவுபடுத்த நான் எடுத்த முயற்சிதான் என்றால் அதுவே உண்மை

**திரு.கே.டி.பால்.,O.B.E., (Mr.K.T.Paul.,O.B.E.)**

சேலத்துச் செம்மல் கே.டி.பால், திரு.கனகராயன் திருச்செல்வம் பால் என்பதே அவரது இயற்பெயர் (Mr.Kanagarayan Thiruselvam Paul) சுருக்கமாக கே.டி.பால் (K.T.Paul) என்று அழைத்தார்கள்.திரு.கே.டி.பால் 1876 ஆம் ஆண்டு மார்ச் 24 தேதி சேலத்தில் பிறந்தார்.அன்றைய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தின் உதவி கலெக்டராக இருந்த திரு.டேவிட் பால் பிள்ளை என்பவரின் அன்புமகன் தான் நமது கே.டி.பால்.அப்பொழுது கே.டி.பால் அவர்களின் பூர்வீக வீடு சேலம் கோட்டை சன்னதி தெரு முகப்பில் இருந்தது.சேலம் அரிசிபாளையம் பகுதியில் அன்று கே.டி.பால் அவர்களின் தந்தைக்கு பால்பிள்ளை தோட்டம் என்று அழைக்கப்பட்ட மிகப்பெரிய தோட்டம் இருந்தது.(இது இன்றைய சேலம் புனித மரியன்னை மருத்துவமனை ,மற்றும் புனித மரியன்னை பெண்கள் மேனிலைப் பள்ளி வளாகங்கள் ). அன்று சேலத்தில் புகழ்பெற்றுத் திகழ்ந்த சேலம் லண்டன் மிஷன் உயர்நிலைப்பள்ளியில் (இது இன்றைய சேலம் கோட்டை CSI ஆண்கள் மேனிலைப் பள்ளி) சேர்ந்து படித்து, பின்னர் சேலம் நகரவைக் கல்லூரியில் (இது இன்றைய சேலம் அரசு கலைக்கல்லூரியின் ஆரம்ப அமைப்பு)சேர்ந்து இண்டர்மீடியட் வகுப்பு தேறினார் கே.டி.பால்.இதனைத் தொடர்ந்து அவர் சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் பட்டபடிப்பு பெற்றார்.இங்கிலாந்து சென்று உயர்கல்வி பயில்வது ஒரு பெருமையாக,குடும்ப கௌரவமாக,விளங்கிய அந்த காலத்திலே சேலம் மற்றும் சென்னையிலே தனது கல்வி முயற்சிகளை நிறைவு செய்து சுதேச சிந்தனையாளராக மாணவப் பருவத்திலேயே திகழ்ந்தார் கே.டி.பால்.சேலம் C.இராஜகோபாலாச்சாரியார் (இராஜாஜி), திரு.P.V.நரசிம்ம ஐயர் ,திரு.P.குருராஜா ராவ், போன்ற பிற்கால தலைவர்கள் கே.டி.பாலின் கல்லூரி நண்பர்களாகத் அப்பொழுது திகழ்ந்தனர்.இந்த நண்பர்கள் இன்னும் சில நண்பர்களோடு இணைந்து கே.டி.பாலின் அரிசிபாளையம் தோட்டத்தின் சோலைகளில் கூடி இலக்கியம், சமயம்,மற்றும் அரசியல் குறித்து அடிக்கடி விவாதிப்பது வழக்கம்.

**பொதுவாழ்வு மற்றும் அரசியல் பிரவேசம் :**

திரு.கே.டி.பால் அவர்தம் மனைவி கனகம்மாள் இவர்களின் திருமணம் 1899ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் தேதி திருப்பத்தூர் லண்டன் மிஷன் சிற்றாலயத்தில் (இது தற்பொழுது CSI கிறிஸ்துநாதர் ஆலயம்,திருப்பத்தூர்)நடைபெற்றது. சேலம் நகரசபை உறுப்பினராகவும், சேலம் நாட்டாண்மை கழக உறுப்பினராகவும் தனது அரசியல் பிரவேசத்தைத் துவக்கிய கே.டி.பால் பின்நாட்களில் இலங்கை, பர்மா உட்பட ஒருங்கிணைந்த இந்திய துணைக் கண்டத்தின் YMCA அமைப்பின் முதல் இந்திய தேசிய பொதுச் செயலாளராக (1916-1930) 14 ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றினார். அப்பொழுது இவர் இந்திய கிராமங்களில் நிலவிய வறுமை நிலைமைகளைப் போக்கி,கிராமங்கள் மேம்பாடு அடைய கிராம மறுசீரமைப்பு (Rural Reconstructions) என்ற திட்டத்தை வகுத்து கிராமங்களின் முன்னேற்றத்தில் ஒப்பற்ற சாதனைகள் புரிந்தார். மேல் படிப்பிற்காக இங்கிலாந்து செல்லும் இந்திய மாணவர்களின் நன்மைக்காக மாணவர் ஐக்கியத்தையும்,மாணவர்கள் தங்கி படிக்க வசதியாக லண்டனில் சேக்ஸ்பியர் குடில் (Shake-speare Hut)என்ற தங்கும் விடுதியையும் அமைத்துத் தந்தார்.

YMCA அமைப்புகள் சார்பாக சர்வதேச அளவில் முதலாம் உலகப் போர் சமயத்தில் பாதிக்கப்பட்ட வீரர்கள்,பொதுமக்கள் ஆகியோருக்கு கே.டி.பால் செய்த சேவைகளைப் பாராட்டி பிரிட்டீஷ் அரசாங்கம் அவருக்கு உயரிய விருதான பிரிட்டீஷ் சாம்ராஜ்ஜிய விருதை (Order of the British Empire -O.B.E.)அளித்து கௌரவித்தது.

**அரசியல் மற்றும் இலக்கியப் பணிகள்:**

இந்திய கிறிஸ்தவர்கள் தேசிய இயக்கத்தில் இணைந்து இந்தியாவின் சுதந்திப் போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்று கே.டி.பால் அழைப்பு விடுத்தார்.சுதந்திர இந்தியாவிற்கு பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்கும் உன்னதப் பணிக்காக 'இந்திய இளைஞர்' (Youngman of India)என்ற பத்திரிக்கையைத் ஆரம்பித்து அதில் 'காவலன்' (Watchman)என்ற புனைபெயரில்

அரசியல்,சுதந்திரப் போராட்டம் பற்றி எழுதிவந்தார். 'இந்திய பாரம்பரியம்' இந்தியாவின் ஆன்மீக தேடல்' 'தேசிய நீரோடையில் இந்திய கிறிஸ்தவம்' 'இந்தியாவின் ஆன்மீக வாழ்வு'நவீன இந்தியாவின் சிற்பிகள்' போன்ற கட்டுரைகளை எழுதிவந்தார்.கப்பல் பயணங்களில் அவர் எழுதிய 'British Connection with India ' என்ற நூல் குறிப்பிடத்தக்கது.

தேசப்பிதா மஹாத்மா காந்தியின் தலைமையில் இந்தியாவில் ஒத்துழையாமை இயக்கம் பரவி ஒட்டுமொத்த இந்தியாவே ஸ்தம்பித்து கலவரங்கள் ஆங்காங்கே மூண்டபோது, அப்போது இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த இர்வின் பிரபு விற்கும், மஹாத்மா காந்திக்கும் இடையே பாலமாக செயல்பட்டு சமரச பேச்சுவார்த்தை காந்தி -இர்வின் ஒப்பந்தம் மார்ச் 5ஆம் தேதி 1931ஆம் ஆண்டு ஏற்பட முக்கிய காரணமாக இருந்தவர் (Gandhi-Irwin pact-March-1931)கே.டி.பால் ஆவார்.

**முதலாம் வட்டமேசை மாநாட்டில் கே.டி.பால்**

1930ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் நாள் துவங்கி 1931ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் நாள் வரை லண்டன் மாநகரில் நடைபெற்ற முதலாம் வட்டமேசை மாநாட்டில் (First Round Table Conference at London) இந்திய கிறிஸ்தவர்களின் பிரதிநிதியாக சேலத்துச் செம்மல் கே.டி.பால் பங்கேற்றார்.அந்த மாபெரும் மாநாட்டில் இந்திய சுதந்திரத்திற்காகவும்,பல்வேறு இன, மொழி,மத,சாதி,மக்களின் பாதுகாப்பு மற்றும் பங்கேற்புடன் நிர்வாக கட்டமைப்பு பற்றியும்,பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டார்.இந்த மாநாட்டில் கே.டி.பால் அவர்களுடன் சட்டமேதை பாபாசாகேப் அம்பேத்கார், இரட்டைமலை சீனிவாசன்,மற்றும் திராவிடர் தளபதி A.T.பன்னீர்செல்வம் ஆகியோரும் பங்கேற்று விவாதங்களில் ,மாநாட்டு அலுவல்களில் ,பங்கெடுத்தனர்.அந்த மாநாட்டு பேரவையில் இந்திய ஒற்றுமைக்கும்,சுதந்திரத்திற்கும்,உருவாகும் புதிய இந்தியாவில் சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்கும் குரல் கொடுத்து முழங்கிய சேலத்து செம்மலை மறக்கமுடியுமா?

**வரலாற்றில் நினைக்கப்படும் கே.டி.பால்:**


சேலம் தந்த இந்திய சுதந்திர போராட்ட வீரர்களில் ஒருவரும்,இந்திய சுதேச மிஷனெரி சங்கத்தை (National Missionary Society of India) உருவாக்கியவர்களில் ஒருவரும்,அகில இந்திய YMCA அமைப்பின் சிற்பியும்,கிராம மறுசீரமைப்பு திட்டத்தின் தந்தையும், தென்னிந்திய திருச்சபை (Church of South India )என்ற மாபெரும் கிறிஸ்தவ தேவாலய அமைப்பு உருவாக முக்கிய காரணமாக இருந்தவருமான கே.டி.பால் இந்திய வரலாற்றில் நினைக்கப்படும் கிறிஸ்தவ தலைவர்.

**கே.டி.பால் நினைவு அடையாளங்கள்:**

முதலாம் வட்டமேசை மாநாடு முடிந்த கையோடு சேலம் திரும்பிய கே.டி.பால் நோய்வாய்ப்பட்டு 11-4-1931 அன்று மறைந்தார்.அவரது மறுஅடக்க குடும்ப கல்லறை சேலம் 4 ரோடு பெரமனூர் சீர்திருத்த கிறிஸ்தவ கல்லறைத்தோட்டத்தில் சேலம் வரலாற்றுச் சங்கம் ,மற்றும் சேலம் YMCA அமைப்பு முயற்சிகளால் பாதுகாக்கப்பட்டு,புதுப்பிக்கப்பட்டுள்ளது.சேலம் மாநகரில் சேலம் மாநகராட்சி அலுவலகங்களின் பின்புற சாலை பால் தெரு (Paul Street) என கே.டி.பால் நினைவாக உள்ளது.சேலம் சத்திரம் அருகே பால் மார்கெட் (Paul Market),சேலம் கோட்டை CSI ஆண்கள் மேனிலைப்பள்ளியில் மாணவர் விடுதி கே.டி.பால் இல்லம்(K.T.Paul House) சேலம் YMCA வளாகத்தில் கே.டி.பால் அரங்கம் (K.T.Paul Hall)ஆகியவை சேலத்துச் செம்மலின் நினைவாக நிலைத்திருக்கின்ற அடையாளங்கள்.

சங்கை H.A.பாப்லி ஐயர் எழுதிய 'K.T.Paul Christian Leader, CLS, second edition 1987 அதனைத் தொடர்ந்து கே.டி.பாலைப் பற்றி மளையாள மொழியில் எழுதப்பட்ட வாழ்க்கை வரலாற்று நூல்,இவைகளை அடியொற்றி நான் எழுதிய 'சேலத்துச் செம்மல் K.T.பால் வெளியீடு YMCA சேலம் ,2014 என்ற புத்தகம் இன்றைய இளைய தலைமுறையினர் கே.டி.பால் அவர்களைப் பற்றி அறிந்துகொள்ள வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் எழுதப்பட்டுள்ளது.சேலத்துச் செம்மல் கே.டி.பால், தென்னிந்திய திருச்சபை வரலாற்றிலும், இந்திய வரலாற்றிலும்,மிகச் சிறப்பாக சேலம் வரலாற்றிலும் கலங்கரை விளக்கமாக நிலைத்து நிற்கிறார்.

## நேட் செயின்ட்



தென் அமெரிக்காவில் ஈக்வடார் என்ற பிரதேசம், அடர்ந்த காடுகள். இருள் நிறைந்த பகுதிகள். அவுக்கா இந்தியர் என்ற நாகரிகமற்ற முரட்டாட்டமுள்ள மக்கள் வசித்து வந்த பகுதி, அங்கு ஆண்டவரின் பணியைச் செய்து, அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் சத்தியத்தை அறிவிக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக, பலர் பிரயாசப்பட்டனர். ஆயினும், அது மிகுந்த கடினமான முயற்சியாகக் காணப்பட்டது . இந்நிலையில் அமெரிக்க மிஷனெரி ஏவியேசன் ஐக்கியத்தை சேர்ந்த நேட் செயின்ட் என்ற மிஷனெரி இம்மக்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பதில் வாஞ்சை கொண்டார். இவர் ஒரு சிறந்த விமான ஓட்டி. எனவே ஆகாய் விமானத்தில் சென்று, அந்த அடர்ந்த காடுகளில் வசித்து வந்த அம்மக்களைக் கண்டுபிடித்தார். இப்பொழுது அவர்களை எப்படி சந்திப்பது என்ற கேள்வி எழுந்தது. இவர் எட்வர்ட் மெக்னல்லி, ஜிம் எலியட், பீட்டர் பிலமின் மற்றும் ரோஜர் யுடரேன் போன்ற மிஷனெரிகளுடன் கலந்து ஆலோசித்து ஜெபித்தார். 'ஆண்டவர் இவர்களின் செயல்பாடுகளுக்குப் புது வேகத்தைக் கொடுத்தார். ஆகாய விமானம் மூலம் சென்று பல வெகுமதிகளை அவர்களுக்கு அள்ளி வீசினர். தங்களை சிநேகிதர்களாக காட்டினர். அவர்கள் எதிர்பார்த்த அந்த நாள் வந்தது. விமானத்திலிருந்து இறங்கி அம்மக்களை நோக்கி மிகுந்த வாஞ்சையுடன் சென்றனர். அன்று ஜனவரி 8. அவுக்கர்களை கண்டுபிடித்த மகிழ்ச்சியால் தங்கள் துணைவியாருக்கு கம்பியில்லா தந்தியின் மூலம் செய்திகளை தெரிவித்தனர். இதுதான் அவர்களின் கடைசி பேச்சாக அமைந்தது. கிறிஸ்துவை அம்மக்களுக்கு கொடுக்கச் சென்ற இவர்களின் உயிரை அவர்கள் பறித்தார்கள். உடலை ஆற்றில் வீசினார்கள். 5 பேர் உடல்களும் அலங்கோலமாகக் கிடந்தன. 5 மிஷனெரிகளும் இரத்த சாட்சியாயினர். நாட்கள் நகர்ந்தன. அவர்களின் முயற்சி வீணாகவில்லை. அவுக்கர்கள் கிறிஸ்துவின் நற்செய்தியால் பிடிக்கப்பட்டனர். அவுக்கர் இனம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டது.

**தமிழ் கிறிஸ்தவ வரலாறுகளை**
**புரட்டிகொண்டிருக்கும்**

# திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம்

**திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.**

திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம் தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரால் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. வரலாற்று சங்கத்திற்கு உதவியாக இக் காரியங்களில் குருத்துவ கல்லூரி மாணவர்கள் பலர் செயல்பட்டு வருகிறார்கள். அவர்களோடு இணைந்து தமிழ்நாடு முழுவதும் உள்ள பல ஆய்வாளர்களுடன் இப்பணியைச் செய்திட ஆண்டவர் வழங்கிய நல்வாய்ப்புக்காக ஆண்டவருக்கு முதற்கண் நன்றி செலுத்துகிறேன்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆண்டவர் வரலாற்று காரியங்களைப் பதிவு செய்வதில் தமக்கு ஏற்ற இறைமக்களைப் பயன்படுத்துகிறார். வரலாற்றை பதிவு செய்வதில் ஆண்டவர் அதிகமாக பயன்படுத்திய தேவதாசர்கள் அநேகம் பேர் உண்டு. வரலாற்றைப் பதிவு செய்வதில் பழைய ஏற்பாட்டில் மோசே, யோசுவா, எஸ்ரா ஆகியோரையும் புதிய ஏற்பாட்டில் நற்செய்தியாளர்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா,யோவான்,பேதுரு,பவுல்,ஆகியோரையும் அதிகமாக பயன்படுத்தி உள்ளதை நாம் பார்க்கிறோம்.

கிறிஸ்தவ வரலாற்றை பதிவு செய்யும் இறைபணியில் நாம் இந்த காலகட்டத்தில் நமது கிறிஸ்தவ வரலாற்று சங்கத்தை ஆண்டவர் பயன்படுத்துவதைக் காணும்போது ஆண்டவருக்கு மிகுந்த நன்றி செலுத்துகிறேன்.

**இதுவரை நாம் செய்தது**



திருச்சபை வரலாறு, மிஷனரிகள் வரலாறு, கிறிஸ்தவ பாடல்கள் உருவான வரலாறு, பாடல் ஆசிரியர்களின் வரலாறு, கிறிஸ்தவ மிஷன் கிராமங்கள் உருவாக்கம் பெற்றவரலாறு, போன்றவரலாறுசார்புடையகாரியங்கள் புலனம் (வாட்ஸ்அப்) முகநூல் (ஃபேஸ்புக்) இணையம் யூ டியூப் வாயிலாக இதுவரைப் பகிர்ந்து கொள்ளப்பட்டன ஆனாலும் எழுதப்பட்ட வார்த்தை நிலையானது Written word is Remineth என்ற பொன்மொழிக்கு ஏற்ப வரலாறு சம்பந்தப்பட்ட காரியங்களை ஒருங்கிணைத்து கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் என்ற மாத இதழை தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம். இந்த மாதாந்திர இதழில் வெளிவரும் கிறிஸ்தவ வரலாறு சம்பந்தப்பட்ட காரியங்கள் நம் அனைவருக்கும் கிறிஸ்தவ வரலாறு சம்பந்தப்பட்ட ஆர்வத்தை உருவாக்கும் வண்ணமாக தமிழ் கிறிஸ்தவ வரலாற்றுக் காரியங்கள் குறிப்பாக தமிழக கிறிஸ்தவ வரலாற்று காரியங்கள் பகிரப்பட்டு வருகின்றன.

திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம் சார்பாக 10 அம்ச செயல் திட்டம் செயல்பட்டு வருகின்றது. உங்களுக்கு அறிமுகப்படுத்துவதில் வெளிப்படுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.




1. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைக்கப் இருக்கும் மாத ஆய்விதழ் தான் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கத்தின் கிறிஸ்தவ வரலாற்று சுவடுகள் மிஷனரிகள், திருச்சபை வரலலாற்று கள ஆய்வுகள், பல வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து.

வந்து கொண்டு இருக்கின்றது.

2. பழமைவாய்ந்த கிறிஸ்தவ வரலாற்று நூல்களை (சபை வரலாறுகள் கிறிஸ்தவ மிஷன் கிராம உருவாக்க வரலாறுகள் மிஷினரிகளின் வாழ்க்கை வரலாறு கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள் அவற்றை எழுதிய பாடலாசிரியர்களின் வாழ்க்கை வரலாறுகள் சேகரித்துக் கொண்டு இருக்கின்றோம்.

3. காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோத்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர். பெயரில் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம் ஏற்படுத்தப்படுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் முதல் நூலகம் இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும் மற்றும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தார்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் ஏற்ப்படுத்தப்பட்டுள்ளது.

4. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மறுபதிப்பு வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றது.

5. கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரிப்பது.

6. இதுவரை வெளிவராத முக்கியமான மிஷனரிகளின் வாழ்க்கை வரலாற்று ஆவணப்படங்களை வெளியிடுவது.

7. மிஷனரிகள் வாழ்ந்த இடங்களையும், மிஷனரிகள் கல்லறைகள் உள்ள இடங்களையும், அவர்களால் கட்டப்பட்ட தேவாலயங்களையும் இரத்த சாட்சிகள் வாழ்ந்த இடங்கள் இரத்த சாட்சிகளாக அவர்கள் மரித்த இடங்கள் ஆகியவற்றையும் பார்க்க விரும்புகிறவர்களின் வசதிக்காக Mission tourist map அதில் தங்குமிடங்கள் புறப்பட்டுச் செல்கின்ற வழித்தடங்கள் ஆகியவற்றை சிறப்பாக அமைப்பது.

8. பராமரிக்கப்படாமல் பாழடைந்த நிலையில் இருக்கிற மிஷனரிகளை நினைவுபடுத்துகிற மிஷனரிகளின் கல்லறைகளை பராமரிப்பது.

9. திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம் சார்பில் ஆய்வு நூலகம் அமைப்பது அந்த ஆய்வு நூலகத்தில் சிறிய அளவிலான மிஷனரிகளின் நினைவுகள், கிறிஸ்தவ பாடலாசிரியர்களின் பழமை வாய்ந்த மிஷனரிகளின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், சபை வரலாற்று நூல்கள் கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாற்று நூல்கள் பாடலாசிரியர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள் ஆகியவற்றை சேகரித்து மக்கள் பயன்பாட்டில் வைப்பது. மிஷனரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து அவற்றை மக்கள் பார்வைக்கு வைப்பது.

10. திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம் சார்பாக வரலாற்று ஆய்வுக் கருத்தரங்கம் நடத்துவது வரலாற்று கள ஆய்வு பயிற்சிக்கான Workshop நடத்துவது.

மேற்கண்ட 10 அம்ச செயல் திட்டங்களை நமது கிறிஸ்தவ வரலாற்று சங்கம் சார்பாக சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது.

கிறிஸ்தவ வரலாற்று பிரியர்களாகிய நீங்களும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மகிமையாக நடைபெறும் இந்த மாபெரும் பணியில் பங்குபெற்று ஒத்துழைப்பு நல்க அன்புடன் வேண்டுகிறோம்.









நம் குழுவினர் கள ஆய்வு செய்யும் போது

JOSHUA
ENTERPRISES

# Meeting your marketing and branding needs.

24, 3/3 Main Road,
Samadanapuram,
Thalapathisamutram, Valliyoor,
Tamil Nadu.
04637 223375
+918870415155
crmjoshua2020@gmail.com

.build an audience